# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 25. தொலை பேசி: 23411

வள்ளுவர் ஆண்டு 2003, ஆடி 8௳ 23-7-72) ஞாயிறு 1391 ஜமா ஆகிர் 11 புத்தகம் 25 இதழ் 35


## மார்ட்டினே சிந்தியுங்கள்!

அமிர்தலிங்கமும், சிவசிதம்பரமும் ஒருவரையொருவர் திட்டிவிட்டு எப்படி ஒரே கூட்டணியிலிருக்கலாமென்று மாட்டின் கேட்டிருக்கின்ருர். கடந்த சில வருடங்களுக்குமுன்னர் மறைந்துவிட்ட பண்டாவைப் பார்த்து கொல்வின் கேட்டார் முதுகெலும்பற்ற ஒருவகை மீன் வர்க்கத்தைச் சேர்ந்தவர் பண்டாவென்று... அப்படிக் கேட்ட கொல்வின் இன்று அவர் மனைவியாருடன் ஐக்கியப்பட்டிருக்கிருரென்ருல் ஏன் நானும் அமிரும் ஐக்கியப்படமுடியாது. மாட்டினே கடந்த காலத்தைச் சற்றுச் சிந்தியுங்கள் ஐயா!

—யாழ். கோட்டை மைதானத்தில் உடுப்பிட்டி சிவா.

## ஆறு அம்சக் கோரிக்கையை ஏற்க மறுப்பின்

# நாடு பிளவுபடும்!

## கடைசிவரை போராடுவோம்!



''புதிய அரசியல் திட்டம் தமிழருக்கு உரிமைகளை வழங்கவில்லை. இத்திட்டம் தமிழர்களை அழிக்கக்கூடியது. தமிழர்களாகிய நாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒன்றுபட்டு உழைக்க தவறியதே இதற்கு காரணமாக இருக்கலாம்.

''இலங்கையின் மற்ற சமூகத்துடன் நாம் சமத்துவமாக வாழமுடியவில்லை. இந்த அரசியல் திட்டம் முற்ருக மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதே நான் சார்ந்துள்ள இ. தொ. கா. வின் கருத்து-

''இன்று தமிழ்க் கட்சிகள் அனைத்தும் தமிழினத்தின் உரிமையை நிலைநாட்டுவதற்கு ஒன்றுபட்டு கூட்டணி அமைத்து விட்டன. இதனை தொழிலாளர் காங்கிரஸ் முற்று முழுதாக ஆதரிக்கிறது. அதன் எடுத்துக்காட்டாகவே எமது பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி கூட்டு முன்னணியில் அங்கம் வகிக்கிருர். கூட்டங்களிலும் கலந்து கொள்கிருர்.

''விரைவில் நடைபெறவிருக்கும் தமிழ்த் தலைவர்கள் சந்திப்பு இதற்கெல்லாம் ஒரு வெற்றிக்கல்லாக இருக்கும். ஒரே நோக்கத்தையுடைய நான் எவரையும் சந்திக்கவிரும்புகிறேன்.

''கடைசிவரை எமது உரிமைகளைப் பெறப் போராடுவோம்.''

— இ. தொ. கா. தலைவர் எஸ். தொண்டமான்.

## தனிநாடு உருவாகுமானல் ஆட்சியாளரே பொறுப்பு!

### யாழ்.கூட்டத்தில் அமிர் எச்சரிக்கை!

இலங்கை பிளவுபடாமல் ஒரே நாடாக இருக்கவேண்டுமென்ற ஆசை ஆளுங்கட்சியிலுள்ளவர்களுக்கு உள்ளபடியே இருக்குமானல் 35 இலட்சம் தமிழ் மக்கள் சார்பில் தமிழர் கூட்டணி முன்வைத்துள்ள ஆறு அம்சக் கோரிக்கையின் அடிப்படையில் புதிய அரசியல் சட்டம் செப்டம்பர் 30ம் திகதிக்குள் திருத்தியமைக்கப்பட வேண்டும். இப்படிச் செய்ய அரசாங்கம் முன்வரத் தவறினல், இந்நாட்டுத் தமிழ் பேசும் இனம் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தனியே பிரிந்து செல்ல நேரிடும். அப்படியொரு நிலை தோன்றுமானல் அதற்கு முழுக்க முழுக்க பொறுப்பேற்கவேண்டியவர்கள் ஆளுங்கட்சியினரே! தமிழினம் தனது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டப் போராடுவதை தவிர வேறு வழியேயில்லை—'

—இவ்வாறுயாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் பேசிய தளபதி நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

'மாணவர் சமுதாயம் இப்பொழுது விழித்துக் கொண்டு விட்டது. மாணவர் எழுச்சியின் முனையை முறிக்கவே அரசாங்கம் காரணம் ஏதுமின்றி அவர்களில் பலரைக் கைதுசெய்து அடைத்து வைத்திருக்கிறது அந்த மாணவர்கள் சிறையிலிருந்து வெளிவரும்போது சிறந்த போராட்ட வீரர்களாக, திடசித்தம் உள்ளவர்களாக வருவார்கள். சிறை நமது உறுதிக்கு ஒரு பயிற்சி முகாம். 70 மாணவர்களை கைதுசெய்ததால் விடுதலை உணர்ச்சி குன்றிவிடாது இதனை அரசு அறியாது தப்புக் கணக்குப் போடுகிறது.



சிறையிருக்கும் மாணவர்கள் இளைஞர்கள், அனைவரையும் ஆகஸ்ட் 6ம் திகதிக்கு

(7-ம் பக்கம் பார்க்க)

## ஒரு மொழி, ஒரு மதக்கொள்கை இந்நாட்டை இரண்டாக்கும்!

—உடுப்பிட்டி சிவா.

உடுப்பிட்டி முன்னள் பா. உ. மு. சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:-

''இன்று ஏற்பட்டுள்ள இக் கூட்டணியை யாரும் உடைத்துவிடமுடியாது. தினபதியும், சிந்தாமணியும் எப்படியாவது பிளவுபடுத்திவிடலாமென்று கங்கணங்கட்டி நாளேட்டிலும், வாரப்பதிப்பிலும் முரண்பாடான செய்திகளைப் பிரசுரிப்பதைத் தமிழ் மக்கள் நன்கறிவார்கள். இதனல் கூட்டணியை உடைத்துவிடலாமென்று கனவு காண்கிருர்கள். யாரும் எதுவும் செய்ய முடியாதவாறு வலுப்பெற்றுவிட்டது எமது கூட்டணியென்பதை இவர்கள் உணரவேண்டும்.

தமிழினத்தின் உரிமைகள் கிட்டும்வரை எமது கூட்டணி தொடர்ந்துபோராட திடசங்கற்பம் பூண்டுள்ளது. எமது உரிமைக்காக நாம் குரலெழுப்புவது வகுப்புவாதம் - நாட்டைப் பிளவுபடுத்துமென்ருல் அதனல் முதலில் தண்டிக்கப்பட வேண்டியது என். எம். பெரேரா அவர்கள்தான். கடந்த 1956ல் இந்நாட்டில் இருமொழிகளுக்கும் இடம் கொடுத்தால்தான் ஒரு அரசாங்கமிருக்குமென்றும் ஒரு மொழிக்கொள்கை நிச்சயம் நாட்டைப் பிளவுபடுத்திவிடுமென்றும் கூறியவர், இன்று எந்தக் கொள்கையைப்பேசி அரசியல் நடாத்துகின்ருர்?

தமிழ் எம்.பி.க்களை பேரவைக்குச் செல்ல கூட்டணியே உத்தரவிட்டது. பேரவையினல் இனிமேல் எதுவித பயனுமில்லையென்று காணுகின்ற கட்டத்தில் அவர்களைக் கூட்டணி வெளியேறுமாறு உத்தரவிடும்.

(7-ம் பக்கம் பார்க்க)

## நாம் முதலில் தமிழன் இதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்!

— கல்குடா பா. உ.

தமிழர் கூட்டணியின் யாழ்ப்பாணப் பொதுக்கூட்டத்தில் கல்குடா பா. உ. தேவநாயகம் பேசுகையில் கூறியதாவது:—

ஒரு காலத்தில் ஆட்சி நடாத்திய தமிழினம் இன்று இரண்டாந்தரப் பிரசையாக்கப்பட்டு விட்டது. அன்று உருவான சோல்பரி அரசியல் திட்டத்தில் இருந்த உரிமைகள் கூட இன்று அழித்தொழிக்கப்பட்டுவிட்டது. தமிழ் மக்கள் தொடர்ந்தும் சிங்கள மக்களை நம்பத் தயாரில்லை, எனவே தமிழ் மக்கள் தங்கள் விருப்பு வெறுப்புக்களை மறந்து ஒன்றுபட வேண்டிய காலம் வந்துவிட்டது. சகல தமிழ் தலைவர்களும் தமிழர் கூட்டணி மூலம் ஒன்றுபட்டு உரிமைகளுக்காகப் போராடவேண்டும், ஒவ்வொரு தமிழரும் முதலில் தமிழன் என்ற கருத்தைக்கொள்ள வேண்டும், பின்பு தான் கட்சி வேறுபாடுகள்.

(4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தமிழர் கூட்டணி கருத்தரங்கு!

'புதிய அரசியலமைப்பும் தமிழர் நிலையும்' என்பது பற்றி தமிழர் கூட்டணியின் கருத்தரங்கு ஒன்றை முன்னள் உடுப்பிட்டி பா. உ. திரு. மு. சிவசிதம்பரம் கூட்டுகின்ருர்.

22.7.72 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு கிரீன்பாத்திலுள்ள புதிய நகர மண்டபத்தில் கூட்டணித் தலைவர் தந்தை செல்வா தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் திரு. அ. அமிர்தலிங்கம், வீ. ஆனந்தசங்கரி பா. உ., இ. தொ. கா. செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி, சி. கதிரவேற்பிள்ளை பா. உ., வி. தர்மலிங்கம் பா. உ. சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் ஆகியோர் உரையாற்றுகிருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# இளைஞர்கள் கட்டுப்பாட்டை உணரவேண்டும்!

## மூன்றுமாத அவகாசம் அரசுக்குமட்டுமல்ல!

## தென்னிலங்கையிலுள்ள தமிழர்கள்

### உடனடியாகத் தமிழ்ப் பகுதிக்குத் திருப்ப வேண்டும்!

தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழு 25.6.72ல் கோப்பாயில் கூடி தமிழர் நலனையிட்டு எடுத்த முடிவுகளையிட்டுத் தமிழர்களிற் பெரும்பகுதியினர் பாராட்டுகிறார்கள். இம்முடிவுகளை ஆதரிப்பவர்களுள் எவரும் தம் சுயசிந்தனையின் பரந்த தன்மை மூலமே ஏற்றுக் கொள்பவராயிருப்பார்கள் என்பதைக்கூறத் தேவையில்லை. ஆனால் இளைஞர்களுள் ஒரு கணிசமான தொகையினர் இதை எதிர்க்கவும் செய்கிறார்கள். இவ்வெதிர்ப்பு பல காரணங்களின் அத்திவாரத்திலிருந்து எழுந்துள்ளதென்பதை எவரும் அறிவர். அவைகள் பின்வருவனவாயிருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு.

அரசின் எதேச்சாதிகாரப் போக்கை நீண்டகாலம் அனுபவித்துவிட்ட விரக்தி மனப்பான்மையாயுமிருக்கலாம்; தமிழர் கூட்டணியின் மூலம் தமிழர்கள் ஒன்றுபட்டுவிட்டார்கள்; அவர்களது வெற்றியின் முன்னேற்றம் எம்மை, தமிழினத்திடமும், சிங்கள எஜமானர்களிடமும் செல்லாக் காசாக்கி விடுமென்று அச்சம்கொண்ட துரோகக் கும்பல்களின் தூண்டிற்கோலிற் சிக்கியதின் காரணமாயுமிருக்கலாம்.

இவற்றுள்முன்னயது நியாயமானதென்றாலும் எமது கட்டுப்பாட்டை சோதிக்கும் தன்மையது. உணர்ச்சியின் பாற்பட்டுச் செய்யும் எந்த முடிவும் நல்ல பலனை அளிக்காது என்பதை நமது இளைஞர்கள் உணருதல்வேண்டும். இரண்டாவது, நமது தலைவர்களின்மீது துரோகிகளின் வார்த்தைகள் களங்கம் கற்பிப்பதற்கு நாமே வழியமைத்துக் கொடுத்த சுயசிந்தனையற்றவர்களாக எம்மை ஆக்கிவிடும். இதுவும் ஒருவகையில் உணர்ச்சியின் பாற்பட்ட அவசரமான முடிவுதான்.

இன்றைய இளைஞர்களுள் சிலர் கூட்டணியினர் தேசிய அரசப் பேரவையை உடனடியாகப் பகிஷ்கரித்துப் போராட்டத்தை ஆரம்பித்து நடாத்த வேண்டுமென்கிறார்கள். இப்படிக்கூறுபவர்களின் உண்மையான நோக்கம் இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் நிலையை உலகத்தின் கண்களுக்கு எடுத்துக் காட்டி உலக மக்களுடனுள்ள மனித உரிமைகளுடன் நாம் இங்கு வாழமுடியவில்லை என்பதை உணர்த்துவதே.

இன்றைய இளைஞர்கள் தமிழ்த் தலைவர்களை வற்புறுத்துவதுதான் இந்நோக்கத்தைப் பலவீனப்படுத்துகின்றதென்பதைநாம்நிச்சயம் சிந்திக்கவேண்டும். ஏனெனில், இப்போது நம் உறுப்பினர்கள் தீர்க்க தரிசனமற்ற முடிவொன்றின் மூலம் குடியரசுக்கு விசுவாசப்பிரமாணமெடுக்க மறுத்து இராஜினாமாச் செய்தார்கள் என்று வைத்துக்கொள்வோம். மீண்டும் இடைத்தேர்தல் நடந்தால், இப்போதுள்ள உறுப்பினர்களை மீண்டும் தெரியப்படுவார்களென்றால் அவர்கள் சத்தியப் பிரமாணம் செய்யத்தான்வேண்டும்.

இந்த முடிவை அரசாங்கம் சிந்தித்து, விசுவாசப் பிரமாணமெடுக்க மறுத்து, அல்லது தேசிய அரசப் பேரவையைப் பகிஷ்கரித்து இராஜினாமாச்செய்து பதவியிழந்தவர்களெவரும் மீண்டும் தேர்தலில் போட்டியிட முடியாதெனச் சட்டமியற்ற முடியாதா? அது இன்றைய அரசின் பலத்தின் மூலம் நிறைவேற்றப்பட முடியாததா? இப்படியான ஒரு சம்பவத்தின்பின் அரசுக்குத் தேவையான தமிழ்ப் பெயர்களைச் சுமக்கும் துரோகப் பொம்மைகள் தேசிய அரசப் பேரவை ஆசனங்களில் இருத்தப்பட்டு உலகத்தின் கணகளுக்குப் பொம்பலாட்டம் காட்டப்படுவதைத் தடைசெய்ய முடியாமல் போய்விடும்.

ஆனால் கூட்டணியினர் தற்போது எடுத்துள்ள தீர்க்க தரிசனமான முடிவின்மூலம் அவர்கள் அரசப் பேரவையில் சொல்லும் ஒவ்வொரு சொல்லும் எமது போராட்டத்தின் ஆயுதமாக உலகத்தின் கண்களுக்குக் காட்டப்படும். உலக மக்களின் ஆதரவுதான் வெற்றி பெற்ற ஆயுதங்களின் சிறந்த ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையை நாம் இழக்கவேண்டுமென்று நமது இளைஞர்கள் விரும்புகிறார்களா? எனவே இளைஞர்கள் அமைதியாகச் சிந்திக்கவேண்டும். கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ள வேண்டும்.

### கொழும்புத் தமிழர்கள்

அண்மையில் கொழும்பு வாழ் தமிழர்கள் ஒரு பிரசுரத்தின்மூலம் தேசிய அரசப் பேரவையைத் தமிழ் உறுப்பினர்கள் பகிஷ்கரிக்க வேண்டுமென்று கேட்டுள்ளார்கள். எந்தவிதமான போராட்டம் ஆரம்பமானாலும், தமிழ் மக்களுக்கு ஏற்படும் இன்னல்களில் சற்றுக் கூடுதலாக அனுபவிக்கப் போகிறவர்கள் கொழும்பு வாழ் தமிழ்பேசும் மக்களே. இவர்களுக்குப் போதிய அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தங்கள் உடமைகளை வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு மாற்றித் தமிழர்களின் பலத்தை அதிகரிக்க ஆவனசெய்தல்வேண்டும். தேசியப் பேரவையைக் கூட்டணியினர் இச்சந்தர்ப்பத்தில் பகிஷ்கரித்தால் தமிழர் போராட்டத் திட்டங்களை நசுக்குவதற்குரிய பாதையாகவே கணிக்கப்படவேண்டும். இம்முடிவைக் கொழும்பு வாழ் தமிழர்கள் ஆதரித்தார்களானால், அவர்கள் சிங்கள மக்கள் இல்லாமல் தாங்கள் இல்லையென்ற அடிமை நிலையை உருவாக்குகிறார்கள் என்பதை நாம் உணரவேண்டும். எனவே கொழும்புவாழ் தமிழர்கள் தமது சிந்தனையைத் திறமையாகக் கையாளவேண்டும். தமிழினத்தின் போராட்டத்தைப் பலப்படுத்த வேண்டி அவர்கள் செயற்படுவார்களாக!

### மாட்டின்

தற்போது ஏரிக்கரைப் பத்திரிகைச் செய்திகளின் படி, இப்பொழுது பேரவைக்குச்செல்லும் [illegible] டணியினர் மாட்டினை [illegible] வெளியேற்றினார்கள். என்ற கேள்வி எங்கோ எழுந்ததாகக் கூறப்படுகிறது. மாட்டினின் நிலை இப்போது என்ன? மாட்டின் எங்கிருந்து வெளியேற்றப்பட்டார் என்பதை யாவரும் நன்குணரவேண்டும். மாட்டின் தமிழரசுக் கட்சிக்கட்டுப்பாட்டை மீறியமைக்காகத் தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார். தமிழரசுக் கட்சிதான் கூட்டணியாக இயங்குகின்றது என்ற கருத்துப் பைத்தியக்காரத்தனமானது.

## சி. அருமைரத்தினம்

(வண்ணார்பண்ணை)

ஆனால் தற்போதைய நிலையில் புதிய அரசியல் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த மாட்டின் அதன் மூலம் தமிழர்களுக்குத் தீங்குள்ளதென்பதை உணர்கிறாரா? இன்றும் அரசாங்கத்தின் அடிவருடியாக இருக்கும் அவர் தமிழர்களுக்காகப் போராடத் தயாராயிருக்கிறாரா என்பதைத் தமிழர்கள் சிந்திக்க வேண்டும். ஆனால் இப்போதைய நிலையில் கூட்டணியினர் கடந்த கால நிகழ்ச்சிகளை மறந்தவர்களாய், தமிழர் நலனே குறிக்கோளாய்க் கொண்டவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் யாரையும் கடந்த காலத்தைக் காட்டி ஏளனம் செய்யவோ, பெருமை கொள்ளவோ விரும்பாமல் தமிழ் மொழி வாழப் பாடுபடுகிறார்களென்பதை அரசியற் சகுனிகள் உணரவேண்டும்!

### மூன்று மாத அவகாசம்

கூட்டணியினரால் அரசுக்கு வழங்கப்பட்டுள்ள 1972ம் ஆண்டு செப்டம்பர் 30ம் திகதி வரையிலான அவகாசம் கூட்டணியினர் கடைப்பிடிக்கும் அரசியல் நேர்மையை உலகிற்கு எடுத்துக் காட்டுவதாயமைந்துள்ளமை பாராட்டத்தக்கது. நாங்கள் இப்போது ஐந்து விடாயினுங் கொடு என்னும் நிலைமைக்கு வந்துள்ளோம். ஈயிருக்கும் இடமாவது கிடைக்காதென்பதை நாம் உணர்ந்தாலும் எதிரிக்கும் ஒரு சந்தர்ப்பம் அளிப்பது கண்ணியமானது. உலகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் வெற்றியடைந்த போராட்டங்களின் முதல் ஆயுதம் கடைசி அவகாசம்தான். இந்தக் கடைசி அவகாசத்தைப் புத்திசாலித்தனமாகப் பயன் படுத்துபவர்களே அறிவாளிகள்.

இந்த அவகாசம் அரசாங்கத்திற்கு மட்டுமல்ல என்பதைத் தமிழ் மக்கள் உணரவேண்டும். இளைஞர்களுக்கு, கூட்டணியினர் எடுத்த முடிவுகளைத் தீர்க்கமாகப் பரிசிலனை செய்து போராட்டத்திற்குத் தயாராவதற்குரியது இந்த அவகாசம்; கொழும்புத் தமிழர்கள், தம் மினத்திற்காகச் செய்ய வேண்டிய தியாகங்களைப் புரிந்து கொள்வதற்குரியது இந்த அவகாசம். தவறு செய்துவிட்ட தலைவர்கள் கடைசிப் பிராயச்சித்தம் செய்வதற்குரியது இந்த அவகாசம் இதே போலத் தாய்க்குலம், தமிழ்க்குலம், முழுதுமே தயாராவதற்குரிய இவ்வவகாசத்தைத் தமிழினம் நன்கு பயன் படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

## இளைஞர்களின் உணர்ச்சிகளைப்

### புரியாதவர்களல்ல தமிழ்த் தலைவர்கள்!

### காலம் கனியும்—கன்னித் தமிழ் அரியணையேறும்!

இன்று சில மாணவர்களிடையேயும், இளைஞர்களிடையேயும் எழுந்துள்ள மன அமைதியின்மையையும் — நிலையற்ற கொள்கைப் போக்கினையும் மாற்றியமைக்க வேண்டிய பாரிய பொறுப்பு தமிழ்க் கூட்டணித் தலைவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. பல அரிய செயல்களைச் செய்ய வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் எம் தலைவர்களுக்கு இப்படியான ஒரு நிலைமை ஏற்பட்டது துர்ப்பாக்கியமே! தினபதி புரிந்த தீய செயலால் — அதன் மாயை வலையில் சிக்கித் தவிக்கின்ற இளைஞர்களை எண்ணிடும் போது அழுவதா? அன்றி சிரிப்பதா என்று தெரியவில்லை. உண்மையான கொள்கைப்பற்றும் — தலைவர்கள் மேல் நம்பிக்கையும் கொண்ட இளைஞர்களுக்கு — மாணவர்களுக்கு தினபதியின் செயல் மேலும் உணர்ச்சிகளை கூட்டுமேயன்றி குறைக்காது. அதன் மாயத்திரை எமக்கு வெள்ளிடை மலையாகத்தெரியும்.

கடந்த சில நாட்களாக தினசதி புரிந்து வந்த சதி வேலைகளும் — நச்சுச் செய்கைகளும் நம் உள்ளத்னதை மாற்றிடவில்லை. ஆனால் அதன் செயல்களுக்கு ஒரு சில இளைஞர்கள் மாறியிருப்பதைக் காண்கின்ற போது உள்ளம் வேதனை அடைகிறது. தமிழ் அரசுக் கட்சியின் மேல் கொண்ட கோபத்தைத் தீர்ப்பதற்கு — தனக்கு செனட்டர் பதவி தரவில்லையென்ற காரணத்தால் அதற்குப் பழிக்குப்பழி வாங்குவதற்கு — தினபதி செய்யும் [illegible] [illegible] டுமல்ல — தமிழ் இனத்துக்குச் செய்யும் படுபாதகமான துரோகச் செயல்களாகும்.

சில இளைஞர்களின் படத்தை முன்பக்கத்தில் வெளியிட்டு அவர்கள் அறிக்கைகளையும் வெளியிடுவதில் தினபதி சில நாட்களாக ஈடுபட்டிருக்கின்றது. இதனால் இளைஞர்களின் உணர்ச்சிக்கு தினபதி முதன்மை கொடுக்கின்றது என்று யாராவது எண்ணிடுவீர்களேயானால் அதற்காக வருந்த வேண்டியது நாங்களல்ல. தன்னுடைய சதி வேலைகளைத் திறம்படச் செய்வதற்கே தினபதி இச் செயலைச் செய்கிறது. குழம்பி நிற்கின்ற இளைஞர்களை தன் பக்கம் இழுக்கத் தினபதி செய்யும் செயலே இது. தனது போட்டோக்களும் கருத்துக்களும் பத்திரிகையில் வந்ததற்காக கொள்கைமாறும் இளைஞர்கள் இருப்பார்களேயானால் அது தமிழர்கள் செய்த துர்ப்பாக்கியம்தான்.

நயினை

நாக. பஞ்சாட்சரம்

இளைஞர்களின் உணர்ச்சியைத் தமிழர் கூட்டணித் தலைவர்கள் புரிந்திடவில்லை என்று எண்ணிடுவது "சிங்கத்தைப் பார்த்து இறைச்சி சாப்பிடத் தெரியாதது இது என்று புலி கூறுவது போன்றதாகும்.

எம்மைவிட இளைஞர் பருவத்திலே உணர்ச்சி வெள்ளத்தில் மூழ்கியவர் எம் தலைவர்கள்! நானும் இளைஞன் தான். எம்மிடம் உள்ளது வீர உணர்ச்சிதான். ஆனால் நம் தலைவர்களிடமுள்ளது இளமை உணர்ச்சி மட்டுமல்ல, அனுபவமும் கூட!! பொறுமை, எதையும் தாங்கும் இதயம் இது 'அண்ணா' கொடுத்துவிட்டுச் சென்ற பொக்கிசங்கள் அவர்களுக்கு! எனவே அவர்கள் எடுத்த முடிவைச் சற்று அலசிப்பார்த்திட — ஆராய்ந்து பார்த்திட வேண்டிய பொறுப்பு எம்மிடம் உள்ளது. இதை விட்டு விட்டு வெறும் உணர்ச்சியில் மட்டும் எதையும் சாதித்திடலாம் என்றெண்ணிடுவது தவறு.

"எம். பி. பதவிகளை தூக்கியெறியுங்கள்" என்று இளைஞர்கள் கேட்டார்கள். நானும் இதே கருத்தைத்தான் ஆரம்பத்தில் கொண்டிருந்தவன். எம். பி. பதவியைத் தூக்கி எறிவது பெரிய காரியமில்லை. ஆனால் அதன் பின்பு என்ன நடக்கும் என்பதுதான் இங்கே சிந்தித்திட வேண்டியது. தீவிர உணர்ச்சி கொண்ட அண்ணன் காசி. ஆனந்தன் அவர்களையும் அண்ணன் வண்ணை ஆனந்தன், (ஆனந்த விஞயகம்) அவர்களையும் காரணமின்றிச் சிறைச்சாலை காவல் செய்கின்றது.

"......இலங்கைக் குடியரசுக்கும், அதன் சட்டதிட்டங்களுக்கும் அமைந்து நடப்பேன்" இவ்வாறு எமது எம். பி. க்கள் சத்தியப்பிரமாணத்தை வாசித்தார்கள். சீ கேவலம். முன்பு இதை எதிர்த்தவர்கள் — எரித்தவர்கள் இவ்வாறு கூறிடுவதா? என்று கேட்கிறார்கள் சில தீவிர உணர்ச்சி கொண்ட இளைஞர்கள் மட்டுமல்ல; அவர்களை இவ்வாறு கேட்பதற்காகவே தனது எழுத்தாற்றல் முழுவதையும் பயன்படுத்திய தினசதிக் கும்பலும் கூட.

சத்தியப் பிரமாணம் என்றால் என்ன? சத்தி

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள்குரலே 'மகேசன்' குரல். எனவே வழமையாக இந்தப்பக்கத்தில் இடம் பெற்றிருக்கும் 'மகேசன் குரலுக்கு'பதிலாக இந்த வாரம் 'மக்கள் குரல்' இடம் பெறுகிறது.**

# தமிழர் கூட்டணிக்கு ஓர் நாளேடு!

இன்று தமிழ் பேசும் மக்கள் எல்லாம் தங்கள் வேற்றுமைகளை மறந்து—கட்சி பேதங்களை மறந்து—தமிழர் கூட்டணியின் கீழ் ஒன்றுபட்டு—தங்களுக்கென ஒரு ஈழத் தமிழகத்தை அமைக்க புறப்பட்டிருக்கும் இந்த நேரத்தில் பத்திரிகைகள் எல்லாம் தினசரி — குறிப்பாக தமிழ் இளைஞர்களுடைய மனதை குழப்பும்விதத்தில் பல செய்திகளை வெளியிட்டு எங்களுடைய உற்சாகத்தை—ஒற்றுமையை கெடுக்கப்பார்க்கின்றன. இது எங்களுக்கு மிகவும் கவலையை அளிக்கிறது. இந்த கவலையை மாற்றி அமைக்கக் கூடிய சக்தி—மருந்து உங்கள் கையில் தான் இருக்கிறது. அந்த மருந்தை இன்றைய நிலையில் ஒரு கிழமைக்கு ஒரு தடவை மட்டும் கொடுத்தால் போதாது. இன்றைய சூழ்நிலையில் அந்த மருந்தை நீங்கள் எங்களுக்கு தினசரி கொடுத்தால்தான் எங்கள் கவலைகள் மறையும். தினசரி உற்சாகமாக போராட்ட காலங்களில் பணி ஆற்ற முடியும். அந்த மருந்து சுதந்திரன் பத்திரிகையைத் தான் சொல்லுகிறேன்.

தேர்தல் காலங்களில் சுதந்திரன் தினசரி பத்திரிகையாக வந்தது போல் இனிமேல் வரப்போகும் போராட்ட காலங்களிலும் சுதந்திரன் பெரிய அளவில் தினசரி பத்திரிகையாக வெளிவரவேண்டும். அப்பொழுதுதான் இந்த தினசரி பத்திரிகைகளின் கொட்டம் அடங்கும். தமிழ் மக்களுக்கும் எது உண்மை—எது பொய் என்று சூட்டோடு சூட்டாக அறிய கூடியதாக இருக்கும்.

இப்போது வெளிவரும் பத்திரிகைகள் எந்தக் காலத்திலும் நமக்கு உதவியாக இருக்கவே மாட்டா. இவை தம்முடைய பணத்தில் வயிறு வளர்த்து நம்மைக் காட்டிக் கொடுக்கவே பிறந்தன என்பதை நாம் மறக்கக் கூடாது.

தமிழர் கூட்டணியைச் சேர்ந்த நாங்கள் எவ்வளவுதான் செய்தாலும்-சொன்னாலும் அதைச் சின்ன விஷயமாகக் காட்டி ஒரு மூலையில் போட்டும் - சில சமயங்களில் போடாமலும் விட்டு விடுகின்றன. ஆனால் எதிராக யாராவது ஒருவரோ இருவரோ அல்லது ஒரு சிறு சில்லரைக் கூட்டத்தினர் சில்லரைச் சேட்டைகள் செய்தாலோ அதை முதல் பக்கத்தில் முழுப் பக்கச் செய்தியாக வெளியிட்டு அவர் அப்படிச் சொன்னார்-இவர் இப்படிச் சொன்னார் என்றும் பத்திரிகா தர்மத்துக்கு ஒவ்வாத முறையில் செய்திகள் வெளியிடுகிறார்கள்.

எங்கள் உணர்ச்சிகளை மட்டம் தட்டும் இந்தப் பத்திரிகைகள் நமக்கு வேண்டாம். சூட்டோடு சூடாக விஷயங்களை எடுத்துக்கூறி எங்கள் உணர்ச்சிகளை மதிக்கும் பத்திரிகைகளே எங்களுக்கு வேண்டும். தமிழ் நாட்டில் தி. மு. க.வுக்கு முரசொலி, மாலைமுரசு, தினத்தந்தி போன்ற தினசரிப் பத்திரிகைகள் இருக்கின்றன. ஆனால் எங்களுக்கோ ஒன்றுமேயில்லை, என்ன வெட்கக்கேடு. பத்திரிகைப்பலம் இல்லாமல் நாம் எப்படிப் போராட்டத்தில் குதிப்பது. இன்றைய நிலையில் தமிழர் கூட்டணிக்கு ஒரு தினசரிப் பத்திரிகை அவசியம். இது சுதந்திரனாகவே இருக்க வேண்டும் என்பதே என் போன்ற பல இளைஞர்களின் அவா. இந்த எண்ணத்தை இன்றே உடனே செயல் படுத்துங்கள். இல்லையேல் நாளைக்குக் கவலைப்படத் தான் போகிறீர்கள். நிதி போதாவிட்டால் அதைப் பகிரங்கமாகச் சொல்லுங்கள். கட்டளையிடுங்கள் செய்யக் காத்திருக்கிறோம்.

வி. ஆர். லிங்கம்.

இணுவில்.

★

**இளைஞர்களே உங்களுக்கு இலவச விளம்பரம் வேண்டுமா?**

தமிழ் இளைஞர்களே! உங்களுக்கு, ''சீப்பப்ளிசிட்டி'' அதாவது இலவச விளம்பரம் தேவையா? அப்படியானால் அதற்கு வழி சொல்லித் தருகிறோம்—

தமிழர் கூட்டணியைத் தாக்கி, காட்டிக் கொடுப்போர், கயவர்கள் துரோகிகள் என்றெல்லாம் கண்டபின்னவென்று, திட்டி எழுதி, மறந்து விடாமல் உங்கள் புகைப்படத்துடன் உங்களூர் தினபதி நிருபரிடம் கொடுத்துவிடுங்கள்!

தினபதியில் அது மேலும் சுவை, கூட்டப்பட்டு உங்கள் புகைப்படத்துடன் முதல் பக்கத்தில் பிரசுரமாகும்!

தினபதி நிருபர்கள் படத்தைத்தா, பட்டைத்தா என்று, கேட்டு ஆங்காங்குள்ள பல இளைஞர்களை நச்சரித்து வருகிறார்களாம். இளைஞர்கள் சிலர் தினபதி நிருபரின் நச்சரிப்பில் மயங்கி தங்கள் படத்தை கொடுத்து விட்டு இப்போது விழி பிதுங்கி நிற்கின்றனராம்!

★

தமிழினத்தின் இந்த இக்கட்டான நிலையிலே... தங்களின் கொள்கைகளை, திட்டங்களை நாளாந்தமும் மக்களுக்குத் தெளிவாக விளங்கப் படுத்துவதற்கு ஒரு தினசரிப் பத்திரிகை கூட்டணியினருக்கு இன்றியமையாத தொன்றாகும்.

தமிழர் கூட்டணியினரைப் பற்றித், தவறாகவும் திரிபாகவும் சில பத்திரிகைகளில் வெளிவருஞ் செய்திகளுக்கெல்லாம் சுடச்சுடப் பதிலடிகொடுத்து உண்மையை விளக்கி உள்ளங்களை உறுதிபெறச் செய்தாலன்றி இலட்சியத்தில் வெற்றி பெறுவது சுலபமானதொன்றல்ல.

முக்கியமாகத், தமிழரசுக் கட்சியையும், தற்பொழுது தமிழர் கூட்டணியையும் எதிர்ப்பதையுமே இலட்சியமாகக் கொண்ட ஒரு, சில பத்திரிகைகளின் 'சோடனைச் செய்திகள்' சிந்திக்கும் ஆற்றல்படைத்த உறுதியற்ற இளமுள்ளங்களை ஒரு கணம் சலனமடையவைக்கின்றனவென்றால், சாதாரண மக்களின் சுமாரான மனோ நிலையைச் சொல்ல வேண்டியதில்லையன்றோ! பிரபல பத்திரிகைகளின் முன்பக்கத்தில் புகைப்படம் பிரசுரமாகுவதையும், தாங்களும் பிரமுகர்களாக்கப் பட்டுத் தங்களின் பெயரும் அடிக்கடி பேப்பரிலே வருவதை விரும்பும் சில இளைஞர்களையும், பகைஞர்களையும் அத்தகைய நாளிதழ்கள் பயன்படுத்தித் தமிழர் கூட்டணியினரின் திட்டத்தை மட்டந்தட்டவே முனைகின்றன. அதனால் அசலுக்கும் நகலுக்கும் வேற்றுமை தெரியாமல் மக்கள் சலனமடைகிறார்கள். ஒரு பொய்யைப் பலதடவைகள் திரும்பத் திரும்பச் சொன்னால் 'மெய்' யென்றுகூட நம்பிவிடுகிறார்கள்.

உரிமைப்போர் என்கிற சாத்வீக இயக்கப் பணிக்குரிய சாதனங்களிலே முதன்மையும் முக்கியத்துவமும் வாய்ந்த கருவி பத்திரிகை தானென்பது, சுதந்திரன் மக்கள்மத்தியில் பெற்றுள்ள செல்வாக்கைக் கொண்டறியலாம்.

தமிழர் கூட்டணியினரின் இலட்சியம் வெற்றிபெறுவதென்றால் — ஆமாம்! தமிழ் மக்களின் சுதந்திர தாகம் தீருவதென்றால் — கூட்டணியினரின் சார்பாக உண்மையை எடுத்தோதும் 'சுதந்திரன்' நாளிதழாகவேண்டும். அல்லது புதிதாகவொரு தினசரி உடனடியாகவே ஆரம்பிக்கப்பட வேண்டும். இக்கருத்தைக் கூர்ந்தாராய்ந்து கூட்டணியினர் முக்கியத்துவம் கொடுத்துச் சிந்தித்து ஆவனசெய்வார்களாக.

எதிர்ப்புப் பணியையே ஆற்றிவரும் பத்திரிகைகள் தமக்குச் சார்பாக மாறுமென்பதைத் துளியும் நம்பி ஏமாறக்கூடாது ஏனைய பத்திரிகைகளைப் பார்ப்பவர்களெல்லோருமே சுதந்திரனைப் பார்ப்பதில்லையே! அப்படியேதான் பார்த்தாலும் கூட ஏழு நாட்களுக்கு விடும் 'திருகுதாளங்களை' விமர்சித்து உண்மையை நிலை நிறுத்தி நீதியை நிலைநாட்டுவதற்குச் சுதந்திரன் 24 பக்கங்களில் வெளிவரவேண்டும் அப்படி வந்தாலுமே இடவசதிபோதாது எனவே, மலரட்டும் கூட்டணியினருக்கு ஒரு நாளேடு! அன்றேல் சுதந்திரன் தினசரி ஆகுக!

எஸ். எஸ். சவுந்தரநாயகம்

வவுனியா.

★

எழுச்சி மிகு, ஈழத் தமிழகத்தின் உணர்ச்சிகளை மூடி மறைத்து. அரசினருக்குப் பயந்தோ அன்றிப் பந்தம் பிடித்தோ, தாமும் தமிழர் கள் என்றதை மறந்து வாழ்ந்து வருகின்றன, தற்போது இலங்கையில் தமிழ்த் தினசரிகள்.

இந்நிலையில், இராமன் மேல் காதல் கொண்டு அவனையடைய முடியாமல் மூக்கறுபட்ட சூர்பனகை, இராமர் குடும்பத்தை குலைக்க முயன்று ஈற்றில் அவளும், அவளது சந்ததியும் முற்றாக அழிந்தொழிந்ததுபோல, தானும் சீக்கிரத்தில் அழிந்தொழிவதற்கு துடியாய்த் துடிக்கிறது நறுதலைப் பத்திரிகை தினபதி.

அதனுடைய ஆசையை நிறைவேற்றும் வண்ணம் அப்பத்திரிகையைத் தங்கள் சனசமூகநிலையத்தை எட்டிக் கூட பார்க்க விடுவதில்லையென அத்தியடி எழுச்சி மிகு வாலிபர்கள் ஒருமனதாகத் தீர்மானித்துவிட்டனர்.

இதேபோல் தமிழினத்தைக் காட்டிக் கொடுத்து யாழ்ப்பாணத்தான், மட்டக்களப்பான் என பிளவுபடுத்தி அவர் சொன்னார் இவர் சொன்னார் என இல்லாதது பொல்லாததெல்லாம் எழுதி, தன் வயிற்றை வளர்த்து வரும் துரோக

விட்டார்கள்'' என்ற தலைப்பின் கீழ், அட்ரஸ் இல்லாத யாரோ ஒரு பாஸ்கரனிடம் பேட்டிகண்ட ''தினசதி'' நிருபரின் செய்தியைக் கண்டு திகைப்படைந்துவிட்டோம்.

பத்திரிகையில் தனது படம் வரவேண்டும் என்றால் அதற்கு ஒரு கதை எழுதி மித்திரன் பத்திரிகையில் போட்டால் நிச்சயமாகப் பிரசுரிப்பார்கள். ஆனால் இவரது நோக்கம் படம் பத்திரிகையில் வரவேண்டுமென்பது மட்டுமன்றி தன்னுடைய சிறுகதைகளை (ஆபாசம்) மித்திரனைத் தவிர வேறெந்த பத்திரிகையும் பிரசுரிக்காதபடியால் படம் போட்டுத் தமிழர் கூட்டணியைத் திட்டித் தீர்த்தால் நிச்சயமாகத் தினபதி நிருபர் தனது கதைக்குச் சிபார்சு செய்வார் என்ற நப்பாசையும் மற்றொரு காரணமென தமிழர் கூட்டணி இளைஞர்கள் கூறிக் கொள்கிறார்கள். 'ஐயோ!' தினபதி நிருபரே இவரா ஓர் தமிழரசுத் ''தொண்டன்?'' தமிழரசுக் கட்சி இளைஞர்களால் இவர் ''பாஸ்கர்'' என்று அன்பொழுக அழைக்கப்படுகின்றார் என்று உன்னால் நிரூபிக்க முடியுமா?

## மக்கள் குரல்

பதியை, சொறிநாயை, குஷ்டரோகியை வடகிழக்கில் மட்டுமல்ல இலங்கையின் எப்பாகத்திலாவது அதன் ஜம்பம் பலிக்காதவாறு முற்றாகப் பகிஷ்கரிக்க வேண்டியது, தமிழ் வாலிபர்களுடைய தலையாய கடமையாகும்.

தமிழ் மக்கள், ஏமாந்த சோணகிரிகள் என்ற நினைப்பில், தன்குத்துக்கரண விளையாட்டுக்களைக் காண்பிக்கும் தினபதியை இன்றிலிருந்து ஏறிட்டுப் பார்ப்பதில்லையென்றும் அதைக் கண்ட இடமெல்லாம் முற்றாகப் பகிஷ்கரிப்பதென்றும் தமிழ் தாயின் மீது ஆணை எடுத்துக் கொள்வோமாக! இதுவே எங்கள் அஹிம்சா வழிப் போராட்டத்திற்கு முதற்படியாக அமையட்டும். அத்துடன் ஏனைய பத்திரிகைகளுக்கும் ஒரு படிப்பினையாகவும் இருக்கும்.

—ஏ. எஸ். தியாகராஜா.

ஆனைப்பந்தி,

யாழ்ப்பாணம்.

எங்கோ கிடந்த இந்த அனுமதேயத்தின் பேட்டியைத் தினபதி பெரிதுபடுத்திப் போட்டதால் இவருடைய வீட்டின் அண்மையில் இருப்பவர்களாகிய எங்கள் இளைஞர்கள், இதற்கு முன்னர் தினபதியில் வந்த ''திருகோணமலை இளைஞர்கள் குமுறுகிறார்கள்! கொந்தளிக்கிறார்கள்!'' என்று தலையங்கத்தில் வந்த செய்திகளையும் இ. பாஸ்கரனின் பேட்டியையும் ஒப்பு நோக்கி தினபதியினதும், போலித் ''தமிழரசுத் தொண்டர்கள்'' என்று தம்மைத் தாமே கூறிக் கொள்கின்ற சந்தர்ப்பவாதிகளினதும் நரி மூளையை எண்ணி கொக்கலி கொட்டிச் சிரித்தும், இவர்கள் தமிழினத்திற்குச் செய்யும் துரோகச் செயலைக் கண்டு உளம் வெதும்பியும் உள்ளனர்.

இத்தகைய போலிப் ''பேட்டியாளர்'' களின் பேட்டிகளைக் கண்டு முதலில் திகைப்படைந்த நாம் இ. பாஸ்கரனின் பேட்டியையும் படத்தையும் பார்த்தவுடன் திருகோணமலை தமிழரசு இளைஞர்கள் என்ற பெயரில் வந்தவர்களது போலி வேடத்தையும் அறியக் கூடியதாக இருக்கின்றது.

— கு. இரத்தினசிங்கம்

ஆ. சிவலிங்கம்

அரியாலையூர்

★

**அரியாலை இளைஞர்கள் கொதிப்பு!**

'தமிழர் கூட்டணித் தலைவர்கள் தக்க நேரத்தில் இளைஞரைப் பேய்க்காட்டி

## ஆசிரியர் எழுதும்

★ அரசியல் மடல்

★ 'அண்ணாவின் தமிழ் நாடு கண்டேன்" —பயணக்கட்டுரையும்

★ குட்டித்தியான் பதில்களும் அடுத்த இதழில் இடம் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## நீதி தேவனின் கோரிக்கை!

கடந்த மே 22ம், 23ம், 24ம் நாட்களில் தமிழ் ஈழ மடங்கணும், புதிய குடியரசு அரசியல் சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முறையில் மிகவும் தீவிர துக்கதினத்தை தமிழ் பேசும் மக்கள் கட்டுப்பாட்டுடன் அனுட்டித்தனர். தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையும், கட்டுப்பாடும், எதிர்ப்புணர்ச்சியும் இந்த ஹர்த்தால் மூலம் உலகடங்கணும் தெரிய வந்தது. குடியரசு எதிர்ப்பு ஹர்த்தால் இப்படி வெற்றிகரமாக அமைவதற்கு துடிப்புடன் முன்னணியில் நின்று செயலாற்றியவர்கள் தமிழ் இளைஞர்களும் மாணவமணிகளுமே!

குடியரசு எதிர்ப்பு ஹர்த்தாலையடுத்து, தமிழ் ஈழமான வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து எழுபதுக்கு மேற்பட்ட மாணவர்களையும் இளைஞர்களையும் காரணம் ஏதும் கூறாது கைது செய்து அவசரகாலச் சட்டத்தின் கீழ் அரசு சிறையிலடைத்து இருக்கிறது. இந்த இளைஞர்களும், மாணவர்களும் இதுவரையும் நீதிமன்றத்துக்கு கொண்டுவரப் படாமலேயே தொடர்ந்து தடுப்புக் காவலில் மாதக்கணக்காக சிறைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

தமிழர் கூட்டணியின் இணைச் செயலாளர் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனும், வண்ணார்பண்ணை தமிழரசு வாலிப முன்னணிச் செயலாளர் ஆனந்த விநாயகமும் சிறையிலடைக்கப்பட்டும் ஒன்றரை மாதங்களாகின்றன.

ஆயினும், இவர்கள் யாரும் கைது செய்யப்பட்டதற்கான காரணம் எதையும் அரசுபகிரங்கமாகத் தெரிவிக்கவுமில்லை; நீதிமன்றத்தில் இவர்களை கொண்டுவந்து நிறுத்தி வழக்குத் தொடரவுமில்லை. அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி தடுப்புக் காவலிலேயே தொடர்ந்து இவர்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படிச் செய்வது நீதியானதுதானா என்பதை அரசு சிந்தித்துப் பார்க்கவேண்டும்!

கைதுசெய்யப்பட்டு, சிறையில் வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்கள், அரசு தரப்பின்படி ஏதாவது குற்றம் புரிந்திருந்தால் அவர்களை நீதிமன்றத்தில் கொண்டு வந்து நிறுத்தி, அவர்கள் மீது வழக்குத் தொடருவதே நீதி, நியாயம் ஜனநாயக பாரம்பரியத்தைப் பின்பற்றும் எந்த ஒரு நாகரீக அரசும் செய்யவேண்டிய வேலையாகும். அதைவிடுத்து பயங்கரவாதிகளை நசுக்குவதற்காக பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டம் எனும் பாசிசச் சட்டத்தை அஹிம்சாவாதிகளான அப்பாவித் தமிழ் இளைஞர்கள் மீது ஏவிவிடுவது கடைந்தெடுத்த அயோக்கியத்தனமாகும்!

சிறையில் வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களில் பலர் மாணவர்கள்; பாடசாலைகளில் படித்துக்கொண்டிருக்க வேண்டியவர்கள்; நாளை இந்நாட்டை வழிநடத்த வேண்டிய பாரிய பொறுப்பை சுமக்கவேண்டியவர்கள்; அத்தகைய மாணவ மணிகளை காரணம் ஏதுமின்றி மாதக்கணக்காக சிறையில் பூட்டி வைத்து, அவர்களது கல்வியை பாழடிப்பது நியாயமான செயல்தானா என்பதை அரசு சிந்தனைக்கு எடுக்க வேண்டும்.

இப்படிச் சில இளைஞர்களை கேள்வி முறையின்றி மாதக்கணக்காக சிறைக்குள் பூட்டி வைத்திருப்பதன் மூலம் வெளியே இருக்கும் தீவிர துடிப்புமிக்க இளைஞர்களின் எழுச்சியை—விடுதலை உணர்ச்சியை—மட்டம் தட்டிவிடலாம்; முனை மழுங்க அடித்து விடலாம் என்று அரசு கருதுமானால், அது ஒருபோதுமே நடவாத காரியம் என்பதை மட்டும் ஆட்சியிலிருப்போருக்கு கூறிவைக்க விரும்புகிறோம்!

கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டிருக்கும் இந்த மாணவர்களும் இளைஞர்களும் நீதிமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டு வழக்குத்தொடரப்பட்டு அப்படி அவர்கள் ஏதாவது குற்றம் புரிந்திருப்பது நிரூபிக்கப்பட்டு, சிறைத் தண்டனை விதிக்கப்படுமானால், நாம் அது பற்றிக் கவலையடையவோ ஆயாசமடையவோ மாட்டோம்; ஏனெனில் விடுதலைப் போராட்டத்தின் போது சிறைத்தண்டனை அனுபவிப்பது ஒன்றும் புதுமையானதல்ல—

ஆனால், எவ்வித காரணமுமின்றி அப்பாவி இளைஞர்களும், பள்ளி செல்ல வேண்டிய மாணவர்களும், நாளும் சிறைக்குள் தள்ளப்பட்டு கிடப்பது ஏன் என்பதுதான் நமக்கும் நாட்டுக்கும் புரியவில்லை. இந்த நிலையை அரசாங்கம் மேலும் நீடிக்கவிடக்கூடாது என்பதுதான் நீதி தேவனின் கேள்வியாகும்!

சிறையிலிருக்கும் இந்த மாணவர்களின் நிலைபற்றி பொறுத்துப் பொறுத்துப் பார்த்துவிட்டுத்தான் கடந்த வாரம் யாழ் நகரில் கூடிய தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு அரசாங்கத்துக்கு கண்டிப்பான ஒரு கோரிக்கையை முன் வைத்திருக்கிறது.

**"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கைதுசெய்யப்பட்டு எதுவித காரணமுமின்றி அவசரகால விதிகளின்கீழ் சிறைக்குள் தள்ளப்பட்டிருக்கும் இளைஞர்களும் மாணவர்களும் ஆகஸ்ட் ஆறும் திகதிக்குமுன் விடுதலை செய்யப்படவேண்டும்; அல்லது அவர்கள் மீது வழக்கு தொடரப்படவேண்டும்; இன்றேல் அரசின் நீதியற்ற போக்கைக் கண்டித்து தமிழ் இலங்கை முழுவதும் துக்கதினம் அனுட்டிக்கப்படும்"**

என்று தமிழர் கூட்டணி எடுத்துள்ள தீர்மானமும் அரசுக்கு விடுத்துள்ள கோரிக்கையும் இந்நாட்டுத் தமிழ்த் தேசிய இனத்தின் ஒருமித்த குரலாகும்!

இந்தக்குரலை, நீதிதேவனின் குரலாக மதித்து அரசு இது சம்பந்தமாக தாமதமின்றி நடவடிக்கையெடுக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

# கொட்டும்மழையிலும் கொள்கைவிளக்கம்!

## 25,000 மக்கள் கலந்து கொண்ட எழுச்சிமிகு காட்சி!

யாழ் கோட்டை மைதானத்தில் நடைபெற்ற கூட்டம் தமிழினம் இதுவரையில் காணாத வகையில் அமைந்து விட்டதென்று மாற்றுக்கட்சியினரும் மனம் விட்டு கூறக் கூடிய வகையில் அமைந்து விட்டது.

ஏறத்தாழ 25 ஆயிரம் மக்கள் கூடிய கூட்டமென்றும், அமரர் வன்னியர் இருந்த காலத்தில் நடைபெற்ற கூட்டங்களை மீண்டும் நினைவு படுத்தியதாகவும் பொது மக்கள் பேசிக் கொண்டார்கள்.

5.30 மணியளவிலேயே ஆரம்பித்த கூட்டம் இரவு 8.30மணி வரையில் எதுவித அசம்பாவிதமுமின்றி நடைபெற்றதையிட்டு காவல் துறையினரே மகிழ்ச்சி தெரிவித்தனர்-கூட்டணியின் பிரதானமானவர்கள் பேசி முடிந்ததும் ஆனந்தசங்கரி பேச எழுந்த நேரத்தில் சிறிது சிறிதாக மழைத்துளிகள் விழ ஆரம்பித்தது. இந்நேரத்தில் ஆனந்தசங்கரி பேசும்போது இந்தச் சிறிய மழையினைக்கண்டு நாம் பின்வாங்குவோமானால் ஒரு பெரிய போராட்டத்தை எப்படி நடத்தலாமென்று கேட்டதும் மக்கள் அசையவில்லை. நாம் எப்படிப் போராட்டம் நடாத்தப் போகின்றோமென்பதை, இந்த மழையில் நாம் எப்படி நடந்து கொள்ளப்போகின்றோமென்பதை வைத்தே தீர்மானிக்க முடியுமென்று சங்கரி கேட்டதும் இளைஞர் சமுதாயம் ஆர்ப்பரித்தது. பெண்கள் ஒருவரும் இருந்த இடம்விட்டு அசையவில்லை. மழை காற்றுடன் பெரிதாகப் பெய்த வேளையிலும் பெண்கள் எழும்பவில்லை. இளைஞர்கள் மேடையை நோக்கிச் சென்று மழையில் நனைந்துகொண்டு பேச வேண்டுமென்று சத்தியாக்கிரகம் செய்தார்கள்.

மழையோ சோனா வாரியாகப் பெய்ய ஆரம்பித்ததும் தலைவர்கள் எழுந்து நின்று இளைஞர்களை மிகப் பணிவோடு வீடுசெல்லும்படி வேண்டினார்கள். அதற்கு அவர்கள் சம்மதிக்கவில்லை. இறுதியாக ஜெயக்கொடி மழையில் நனைந்தபடி பேசிக் கூட்டத்தை முடிப்பதாக அறிவித்தார். யாழ் நகரின் சரித்திரத்தில் இப்படியொரு பேரெழுச்சியை அண்மைக் காலத்தில் கண்டதில்லை.

மழை ஆரம்பித்த வேளையில் தந்தை அவர்களுக்கு தலையில் கட்டுவதற்கு ஒரு துவாய் கொடுக்கப்பட்டது. பின்பு அவரை மேடையை விட்டு காரில் வந்து அமருமாறு தளபதி அமிர் வேண்டியும் அவர் சம்மதிக்காததைக்கண்ட பொது மக்கள் பெரியவரின் திடசித்த உள்ளத்தைக் கண்டு மெய்மறந்தனர். மெலிந்த உருவம் ஆனால் இரும்பு உள்ளம் என்று பலரும் கூறினர்.

மொத்தத்தில் யாழ் கூட்டம் கூட்டணிக்கு மிகப் பெரியவொரு வெற்றி! எப்படியாவது கூட்டத்தை நடைபெறுமல் செய்துவிடுவதற்கு பலரும் பலவழிகளில் முயன்றும் கண்டது தோல்வியே. அதி பிரதானமானவர்கள் பேசி முடிந்ததும் — பிரதான முடிவுகள் யாவும் மக்கள் அறிந்த பின்புமே மழை வந்து-இயற்கையும் ஒத்துழைத்தது குறிப்பிடத்தக்கது. மழை வந்தது ஒரு நல்ல சுப சகுனம் தானென்று உடுவில் பா. உ. தர்மர் மேடையில் நின்று தெரிவித்தார்.

மங்கையர்க்கெல்லாம் அரசியாகத் திகழும் திருமதி அமிர் ஆற்றிய பணியினை எளிதில் மறந்திட முடியாது. தான் நனைந்துகொண்டு ஏனைய பெண்களைப் பாதுகாத்துவிட தன்னையே அர்ப்பணித்துச் செயற்பட்டதைக் கண்ணுற்ற போது உண்மையில் இனத்திற்காக தனது வாழ்வையே அர்ப்பணித்து விட்டாரென்றே கூறவேண்டும். தமிழினத்தின் சரித்திரத்தில் மங்கையர்க்கரசிக்கு தனியொரு வரலாறு தீட்டப்பட வேண்டுமென்று மக்கள் பலரும் மனம்விட்டுக் கூறினார்கள்.

— வண்ணை நிருபர் 'சண்'

## மீண்டும் ஹர்த்தால்!

யாழ்ப்பாணத்தில் 16-7-72ல் நடைபெற்ற தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

(1) எதுவித காரணமுமின்றி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுமார் 70மாணவர்களையும் இளைஞர்களையும் அரசாங்கம் கைது செய்து மாதக்கணக்காக தடுப்புக்காவலில் வைத்திருப்பதை தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், அவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்—அல்லது அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்ய வேண்டுமென்று அரசைக் கோருகிறது.

ஆகஸ்ட் 6ந் திகதிக்கு முன் அவர்களை விடுதலை செய்யவோ அன்றி வழக்குத் தாக்கல் செய்யவோ அரசாங்கம் தவறினல், அரசின் நீதியற்ற செயலை கண்டித்து தமிழ்நாடு முழுவதும் ஹர்த்தால் அனுட்டிப்பதென்றும் கூட்டணி தீர்மானிக்கிறது.

கைதுசெய்யப்பட்டுள்ள இளைஞர்களை விடுதலைசெய்ய உதவவும், விடுதலை செய்யாவிட்டால் சட்ட நடவடிக்கையெடுக்கவும் வழக்கறிஞர்களைக் கொண்ட குழு ஒன்றையும் தமிழர் கூட்டணி நியமித்துள்ளது.

(2) வடக்கு கிழக்கு மாகாணங்களின் பாதுகாப்பிற்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் ஏற்ற நடவடிக்கை எடுக்கத் திரு. கு. நேசையா தலைமையில் உப குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

(3) தமிழர் கூட்டணியின் சார்பாக 'தமிழணி' என்ற ஒரு பிரசார ஏட்டை வெளியிடுவது.

(4) தமிழர் கூட்டணியின் பிரசாரக் கூட்டங்களை ஆகஸ்ட் 22 முதல் 27 வரை மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்துவது.

---

## கட்சி நலன் பேசுவது யார்?

கட்சி நலனுக்காக சுதந்திரன் பிரசாரம் செய்கிறது. கட்சி நலனிலும் பார்க்க இனத்தின் நலனையும் எதிர்காலத்தையும் முன் வைத்து சுதந்திரன் ஆசிரியர் பணிபுரிய வேண்டும்.

— விடுதலை (15-7-72)

கிராமங்கள் தோறும் பட்டினங்கள் தோறும் சுயாட்சிக்கழகக் கிளைகளை அமைத்து இலட்சியத்தைப் பரப்ப வேண்டும். மாவட்ட ரீதியிலும் தொகுதிவாரியாகவும் கழக நடவடிக்கைகளை பொறுப்பேற்பதற்கு அமைப்பாளர்கள் தேவை.

சுயாட்சிக்கழகத் தலைவர் வி. நவரத்தினம் - விடுதலை (15-7-72)

## நாம் முதலில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்கள் இந்நாட்டில் இரண்டாந்தரப் பிரசைகளாவார்களென்று முன்பே தெரிந்திருந்தால் சோல்பரியின் காலத்திலேயே நாம் எமது உரிமைகளைப் பெற்றிருக்கலாம். இலங்கை சுதந்திரம் பெறவேண்டுமென்று போராடியவர்களில் பெரும்பாலானோர் தமிழ்த் தலைவர்கள் தாமென்பதை இன்று சிங்களவர் மறந்து விட்டார்கள். தமிழர் பிளவை விரும்பாது ஒற்றுமையாக வாழ வேண்டுமென்ற ஒரே நோக்கோடுதான் அன்றைய தேசிய அரசிலும் சேர்ந்து ஒத்துழைப்புக் கொடுத்தனர். இலங்கையின் சுதந்திரத்திற்கு அயராதுழைத்தவர்கள் தமிழரும் தானென்பதை ஐ.தே.க. அன்றுஉணர்ந்து இருந்தது. அதனால் தான் தமிழ் மக்களும் ஆதரவு கொடுத்தனர்.

தமிழ் மக்களுக்கு சம அந்தஸ்து வழங்கப்படவேண்டுமென்று போராடிய கொல்வின், சிங்களம் மட்டும் சட்டம் இயற்றப்பட்டபோது தமிழர்க்காக கண்ணீர் வடித்தவர், இன்று தானாகவே ஒரு அரசியல் திட்டத்தை உருவாக்கி தமிழர்க்குத் துரோகமிழைத்து விட்டார். தமிழினம் புதை குழியில் விழத் திட்டம் வகுத்தார். இத்தகையபாதகஅரசியல் வாதிகளால் இனத்திற்கு எதுவித நன்மையுமில்லை.

இன்றைய அரசியல் திட்டத்தினால் தமிழினத்திற்கு எதுவித நன்மையுமில்லையென்பதையுணர்ந்த பின்னரும் தமிழினம் பேசாதிருக்க முடியாது. அதுவும் இந்நாட்டில் சமத்துவமாக வாழ வேண்டிய தமிழினம் இரண்டாந்தரப் பிரசைகளாக வாழ்வதா? சிந்திக்க வேண்டும், தனியொருவன் தமிழர் என்று வாழ்வதில் பிரயோசனமில்லை. ஒரு சமுதாயமாக வாழ்ந்தால்தான் இந்நாட்டில் தமிழினம் வாழும்.

இனத்தைப் பிளவுபடுத்திவிட முற்பட்டு நிற்கும் வீ. பீ. போன்ற கம்யூனிஸ்ட்டுகள் எமக்கு எதுவும் செய்ய வேண்டாம். சற்று ஒதுங்கியிருந்தால் அதுவே போதுமானது. இதுவே தமிழனின் இறுதிக்கட்டம், இதுவே நல்ல தருணம், இந்த முக்கூட்டு அரசுக்கு எதிராகத் திரண்டிருக்கும் தமிழர் கூட்டணியில் ஒன்றுதிரண்டு இந்த அரசியல் திட்டத்தினை எதிர்ப்பதற்கு யாவரும் முன்வரவேண்டும்.''

இவ்வாறு தேவநாயகம் உரையாற்றினர்.

## காசி ஆனந்தன் சிறையில் இன்று 44வது நாள்!

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனும், ஆனந்தவிநாயகமும் அவசரகாலச் சட்டத்தின்கீழ் பொறளை சிறையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு இன்றுடன் 44 நாட்கள் ஆகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன்துறை பட்டினசபையில்

# கறுப்புக்கொடி இறங்கியதேன்?

## ப. ச. தலைவரின் சந்தர்ப்பவாதமா? பாதம் தாங்குவோரின் கபட நாடகமா?

காங்கேசன் துறைப் பட்டின சபையில் கறுப்புக் கொடி ஏறி இறங்கிய கதையின் பின்னணிபற்றி உங்கள் பத்திரிகை மூலம் விளக்கலாம் என்று விரும்புகின்றேன். தமிழ் மக்கள் உண்மை நிலையை உணர்ந்துகொள்ள உதவுவீர்கள் என்றும் எதிர்பார்க்கிறேன்.

ஈழம் குடியரசாகமாறிய வைகாசித்திங்கள் 22ம் நாள் தமிழ் ஈழம் எங்கும் துக்க தினம் அனுட்டிக்கப்பட்டது. ஒவ்வொரு தமிழ் மகனும் புதிய அரசியற் திட்டம் தமிழ் மக்களுக்குப் பாதகமானது என்று உணர்ந்து அதனை எதிர்த்து அமைதி வழியிற் தமது எதிர்ப்பைத் தெரிவித்தான். ஒவ்வொரு தமிழ் மகனின் வீட்டிலும் கறுப்புக்கொடி கட்டப்பட்டுத் துக்கம் அனுட்டிக்கப்பட்டது.

### பட்டினசபை மௌனம்

பல உள்ளூராட்சி மன்றங்களிலும் ஆட்சியாளரின் அரசியற்திட்டத்தைத் தமிழினம் ஒரு போதும் ஏற்காது என்று தலையசைப்பதுபோல் கறுப்புக்கொடி அரைக் கம்பத்தில் அசைந்தாடித் தமிழினத்தின் அதிருப்தியைத் தெரிவித்துக் கொண்டிருந்தது. அந்த நேரத்தில் கிழக்கின் தலைநகராம் திருமலை நகரசபையிற் கறுப்புக் கொடி கட்டிய வாலிபரைக் கைது செய்தபோது சபையின் அனைத்து உறுப்பினர்களும் ஒன்று சேர்ந்து மீண்டும் கறுப்புக்கொடியைப் பறக்கவிட்டு ஈழத் தமிழகத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கிய வேளையில் காங்கேசன்துறைப் பட்டின சபையோ மௌனம் சாதித்துக் கொண்டிருந்தது.

ஈழத் தமிழக உள்ளூராட்சி மன்றங்களெல்லாம் அரசியலமைப்பைத் திருத்தும்படி வேண்டுகோள் விடுத்துத் தீர்மானங்கள் நிறைவேற்றி அரசினருக்கு அனுப்பிக் கொண்டிருந்த வேளையில் அது பற்றிச் சிந்திக்காமல் இருந்த காங்கேசன்துறைப் பட்டினசபை இன்று தமிழினத்தின் ஒற்றுமை முன்னணியைக் குலைத்திடச் சதிசெய்கின்றதா? என்று மக்கள் உணர்ச்சியுடன் கேட்கின்றனர்.

பட்டினசபைத் தலைவர் அரசினரைத் தாஜா பண்ணச் செய்யும் சதித்திட்டங்களுக்கு ஏனைய பிரதிநிதிகளும் உடந்தையாய் இருப்பதா? கூடாது! அவரோடு சேர்ந்து இன்னொரு அங்கத்தவரும் ஆடுகிறாரா? அதுவும் கூடாது; அவர் விரும்பினால் ஆட்சியாளருக்கு அடிவருடிக் கொள்ளட்டும்! ஆனால் மானமுள்ள ஏனைய பிரதிநிதிகளே உங்களை மன்றாடிக் கேட்கிறோம். கூட்டணியைக் குழப்பிவிடும் முயற்சிக்கு எந்த விதத்திலும் துணைபோகாதீர்கள்! இதற்கெல்லாம் சூ(த்திரதா)ரியர் யார் என்று தமிழ்மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

அரசினரை எதிர்க்காமல் இருந்தால் சிறு சிறு சலுகைகளைப் பெறலாம் என்று ஏமாந்து எங்கள் உரிமை பறிபோகும் நேரத்திலும் எமது எதிர்ப்பைத் தெரிவிக்காமல் இருக்கலாமா? இருக்கக் கூடாது! இருக்க முடியாது! ஆனால் முழுக்க முழுக்க தமிழ் மாநிலத்திலுள்ளதும் ஆட்சியாளரின் கவனத்தை ஈர்க்கக் கூடியதுமான காங்கேசன் துறைத் தொகுதியிலே அமைந்துள்ள பட்டின சபையோ இளைஞர்களினதும், தமிழ் மக்களினதும் எதிர்ப்புக்கிணங்க அரசினரை எதிர்த்தால் அற்ப சலுகைகளைப் பெறமுடியாதே என்று நினைத்து மௌனத்திற்கு காலத்தைக் கடத்தியது. இளைஞர்களின் வற்புறுத்தலின் பேரில் ஒழுங்கு செய்யப்பட்ட விஷேட கூட்டமும் ஏதோ சாட்டுச் சொல்லிக் கூட்டாமல் கைவிடப்பட்டது.

### தீர்மானம்

பின்னர் தன்மானத் தமிழ் உள்ளங்களின் கொதிப்பை உணர்ந்து கூட்டம் வேறோர் திகதியிற் கூட்டப்பட்டது. அக் கூட்டத்தில் 3ம் வட்டார உறுப்பினர் அவர்கள் தமிழ் மக்கள் குடியரசுச் சட்டத்துக்கு அதிருப்தியைத் தெரிவிக்கும் வகையில் கறுப்புக் கொடி பறக்கவிடப்பட

**காங்கைவேலன்**

வேண்டும் என்றும் பட்டின சபை சரியான நேரத்தில் இதனைச்செய்யாமல் விட்டபடியால் தமிழ் மக்களின் பிரதிநிதிகளான நாங்கள் அவர்களிடம் மன்னிப்புக் கோரி அவர்களின் பட்டின சபையில் 3 மாதத்துக்குத் தொடர்ந்து கறுப்புக்கொடியைப் பறக்கவிட வேண்டும் என்றும் தனது தீர்மானத்தைச் சபையிற் சமர்ப்பித்துப் பேசும்போது குறிப்பிட்டார். அவரின் பிரேரணையை அனைவரும் ஆதரித்தனர்.

இங்கே சிரிப்புக்குரிய விடயம் யாதெனில் தனது திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் ஏனைய உறுப்பினர் முட்டுக்கட்டையான பிரேரணையைக் கொண்டு வந்துவிட்டார்களே என்று சிந்தித்துக் கொதித்தெழுந்த தலைவர் ஏதாவது பேசவேண்டும் என்ற நினைப்பில் தானும் தமிழ் மகன் தான் தமிழ் மக்களின் பிரதிநிதிதான் என்றும் தனக்கும் அமைச்சர் குமாரசூரியருக்கும் உள்ள உறவு தனிப்பட்டது என்றும் அது எப்போதோ ஏற்பட்ட உறவு என்றும் அதனையும் கறுப்புக்கொடி விடயத்தையும் ஒன்றுபடுத்த வேண்டாம்என்றும்கூறினார். தன்னை எங்கிருந்தோ இங்கு வந்த ஒருவர் பதவியிலிருந்து நீக்குவதற்கு நினைக்கிறார் என்றும் தன்னை அங்கிருந்து அகற்ற எவராலும் முடியாது என்றும் ஆணவத்துடன் பேசினார்.

அவர் மக்கள் மத்தியை மறந்து ஆணவத்துடன் பேசித்தான் யார் என்பதையும் தனக்கும் சூரியருக்கும் ஏற்பட்ட அந்தரங்க உறவையும் வெளிப்படுத்தியதோடு நிற்காமல்' தமிழினத்திற்கு விடுதலை கிடைக்கும் வரை கறுப்புக்கொடி பறக்கவிடப்படவேண்டும் என்றும் திருத்தம்வேறுகொண்டு வந்தார். அவர் ஆத்திரத்திற் கூறியது தமிழ் மக்களின் எண்ணத்துக்குச் சாதகமாயிருந்தபடியால் அனைத்து அங்கத்தினரும் அதனை உற்சாகத்துடன் வரவேற்றனர். பார்வையாளர் கலரியிலிருந்த இளைஞர்களும் குதூகலித்தனர்.

### கொடியை இறக்க சூழ்ச்சி!

அந்தோ பரிதாபம்! அந்தக் கொடிக்கு வந்தது ஆபத்து! கூட்டத்தில் ஆத்திரத்தில் ஏதோ உளறிவிட்டேனே ஆட்சியாளர் தன் [illegible] கிருர்களேயென்று துரோகத்தின் துணைவர் தனக்குள்ளே பொருமியிருக்க வேண்டும். எப்படியும் அந்தக் கொடியை அகற்ற வேண்டும் என்பதே அவர் திட்டமாக இருந்திருக்கவேண்டும். பொலிசார்கொடியை இறக்கச் சொன்னார்கள். இதற்கு யார் உடந்தையென்பது பொது மக்களுக்கு நன்கு தெரியும்.

மீண்டும் இளைஞர்களின் தூண்டுதலின் பேரில் முன்னால் தலைவர் மீண்டும் கறுப்புக்கொடியைக் கம்பத்தில் ஏற்றினார். விடுதலை கிடைக்கும் வரை கறுப்புக்கொடி பறக்கவிட வேண்டும் தனக்கும் மானம், ரோசம், சூடு, சுரணை இருக்கிறது என்று காட்ட முனைந்த தலைவர் இந்தநிகழ்ச்சியிற்கலந்து கொள்ளாது ஒதுங்கிக் கொண்டார். தமிழ் இளைஞர்கள் இன்று தமிழ்த் துரோகிகள் யார் என்று இனங்கண்டுகொள்ளப் பழகி விட்டார்கள். எவருடைய சூழ்ச்சி வலையிலும்அவர்களை வீழ்த்த முடியாது என்பதைத் துரோகிகள் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும்.

மீண்டும் ஏற்றப்பட்ட கொடி தனது தலைமையின் கீழ் இயங்கும் பட்டினசபையிற் பறக்கிறதே என்று ஒரே தலையிடியாய் இருந்திருக்க வேண்டும். இத்தனைக்கும் இந்த விடயங்கள் எதிலும் கூட்டணி உறுப்பினர் எவரும் வற்புறுத்தவில்லை என்பதும் இளைஞர்களினதும், தமிழ்ப்பெரியோர்களினதும் வற்புறுத்தலின் பேரிலேயே இது நடந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. கொடியை இறக்கிட வழி தேடிய அவரின் சிந்தனைக்கு எதுவும் அகப்படவில்லை.

அப்போதுதான் தமிழர் கூட்டணி உறுப்பினர்கள் தேசியப் பேரவைக்குச் செல்வதா செல்லாமல் விடுவதா? என்ற பிரச்சினை அவருடைய சிந்தனைக்கு எட்டியிருக்க வேண்டும். அதைக் கொண்டே விஷயத்தை முடித்திடத் திட்டம் போடப்பட்டது.

கூட்டணி பா. உ. க்கள் பேரவைக்குப் போகக் கூடாது என்றும் அவர்கள் பேரவைக்குச் சென்றால் கம்பத்திற் பறக்கும் கறுப்புக் கொடியை இறக்குவதற்குத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுத் தீர்மானம் நிறைவேறியதாகவும், அக் கூட்டத்தில் 2ம் வட்டார உறுப்பினர் கலந்து கொள்ள

(8ம் பக்கம் பார்க்க).

---

# மலையக தொழிற்சங்கங்களின் ஒற்றுமை முன்னணி!

## இ. தொ. கழகம் அமைக்கும்! கெங்கரத்தினம் தகவல்!

2-7-1972 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு மாவட்டச் செயலாளர், திரு. எஸ். மாணிக்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்டக்குழு—தோட்டத்தலைவர்கள் கூட்டத்தில் முக்கிய பேச்சாளராகக் கலந்துகொண்ட இலங்கைத்தொழிலாளர் கழகத்தின் துணைச் செயலாளர் திரு. எஸ். கெங்கரத்தினம் அவர்கள் உரையாற்றும் போது கூறியதாவது:-

"இந்த நாட்டிலே வாழும் அரசாங்க ஊழியர்கள் அனைவருக்கும் பஞ்சப்படி ரூபா 17-50 வழங்கப்படும்போது, ஏன் இந்த இந்தியத்தோட்டத்தொழிலாளி போராட்டம் நடத்தியும் 17-50 பெற முடியவில்லை. காரணம் என்ன? பஞ்சப்படி 17-50 கட்டாயம் பெற்றுத்தருவோம் என்று அன்று மார்தட்டி கூக்குரலிட்டவர்கள் இன்று ஆட்சிபீடத்திலிருக்கிறார்களே! ஏன் இன்னும் 17-50 பெற்றுக்கொடுக்க முடியவில்லை. இது இந்தியத் தோட்டத் தொழிலாளியின் விதியா? அல்லது அரசாங்கம் செய்யும் சதியா? என்று சிர் தூக்கிப் பார்ப்போமேயானால் உண்மையில் இந்த ஈழவள நாட்டை வளம் படுத்தும் நம் தமிழ் தொழிலாளர்கள் நாடற்றவர்கள், இந்தியாவா, இலங்கையா? என்று இருதோணியில் கால் வைத்துக்கொண்டு தத்தளிப்பவர்கள். இப்படியான ஒரு பின் தங்கிய சமூகத்தினருக்கு எப்படி சம்பள உயர்வை அரசாங்கம் பெற்றுக் கொடுக்க முன் வரும். எப்படி தொழிற்சங்கத தலைவர்கள் ஒத்துழைப்பார்கள்.

"இந்த இழி நிலையில் நாம் கேட்பது சுயநல சம்பள உயர்வா? அல்லது தொழிலாளர்கள் நாம் வாழும் சம்பள உயர்வு கேட்கப்படுகின்றதா? நாம் நாளுக்கு நாள் சம்பளத்திற்காக போராட்டம் நடத்தி நடத்தி உளுத்துப்போய் விட்டோம். ஆனால் இதே நேரத்தில் "ரொக்கட்" வேகத்தில் உயர்ந்திருக்கும் விலைவாசியை சமாளிக்க முடியவில்லை. எவனின் உழைப்புக்கு ஏற்ற ஊதியத்தை தர வேண்டுமென, நாம் யாவரும் ஒரு கொடியின் கீழ் திரண்டு போராடினால் தொழிலாளி சம்பள உயர்வால் நிச்சயம் மேம்பட இயலும். அதனை நாங்கள் உங்கள் மொழி வழித் தொழிற்சங்கமான கழகத்தின் கீழ் நாடாளுமன்றத்தில் குரலெழுப்பி பெற்றுத் தர ஆவன செய்வோம். மலைநாட்டில் வாழும் தொழிலாளர்களின் நலனுக்காக இன்று பாடுபடும் தொழிற் சங்கம் யாவும் ஒன்று சேர்ந்து ஒரு ஐக்கிய முன்னணி மொழிவழித்தொழிற் சங்கசம்மேளனம் அமைத்து தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளை பெற்றுத் தர ஆணித்தரமான ஒரு போராட்டத்தை நாம் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் கீழ் இயங்கும் இலங்கைத்தொழிலாளர் கழகத்தின் வாயிலாக மேற்கொள்வோம்."

இக்கூட்டத்தில் மற்றும் இலங்கைத்தொழிலாளர் கழகத்தின் துணைச் செயலாளர்களில் ஒருவரான திரு. அந்தோனிசாமி, மாவட்டப் பிரதிநிதி திரு. வி. ஏ. நாதன், உதவி மாவட்டப் பிரதிநிதி திரு. எம். நடராஜமூர்த்தி மாவட்டத் தலைவர் திரு. ந. அ. சின்னத்தம்பி, செயலாளர் திரு. எஸ். மாணிக்கம் ஆகியோர் பேசினர்.

---

## வஞ்சினம்

தமிழ்த்தாயை அரசியலார் தம்தாய்க்கு
சக்களத்தி என்று எண்ணுகின்றார்
தமிழ் தாயின் சாபத்தை சிங்களவர் அறியாமல்
முனைகின்றார் அவர் அழிவில்
தமிழ் தாய்தான் ஆரியரைவென்றடக்கி
தலைமேலும் கல்லேற்றி
தமிழச்சி கண்ணகிக்கு சிலைசமைத்த
வரலாற்றை அறியாமல்

அறம்பிழைத்த பாண்டியனே நீயும்
ஓர் அரசனோ என்றரற்ற
மறத்தமிழன் பாண்டியனும் மதிஇழந்தேனே
என்று முடிசாய்ந்தான் மண்ணினிலே
அறக்கடவுள் முன்நிற்க அழகு தமிழ்
கண்ணகியின் வஞ்சத்தால்
மறக்குலத் தமிழர்க்கோர் நீங்காத கறை
படிந்த வரலாற்றை அறியீரோ

ஆதியிலே அந்தணர்கள் ஆரியத்தை
தெய்வமொழி என்றவர் கற்றறிந்தார்
பாதியிலே பயன் குன்றிதாய்மொழியும்
தேய்வதையும் கண்டு நொந்தார்
சிதப்புனல் வேணியன்மேல் சீர் இளமைகுன்றாமல்
வளர்ந்து வரும்
ஓதுதற் குயர்மொழி தன் உலகினிற்கொரு
மொழிதமிழ் மொழி என்றறிந்தார்

அறம்பாட அவைப்புலவர் நக்கீரர் ஈங்கில்லை
அவர் வழியில்
அறத்தின் வழிகவிபாட கனபுலவர்
ஈழத்தாய் ஈன்றுவிட்டாள்
மறம் மலிந்தால் அவர் நெஞ்சினிலே உரம்
பெற்று கவிபுனைந்தால்
அறம் தேயும் அவனியெலாம் அனல்கொதிக்கும்
மாரியும் பொய்த்திடுமே

பண்டிதர் கந்தையா,
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய அரசியல் சட்டமும் தமிழுரிமையும் (3)

# சிங்களம்–செந்தமிழ் அழிக்கும் செந்தீ!

ஆங்கில ஏகாதிபத்தியம் சிங்கள உத்தியோகத்தரையும் தமிழ் உத்தியோகத்தரையும் எவ்வித வேறுபாடுமின்றி நடத்தியது. சிங்கள ஏகாதிபத்தியம் எவ்வகையில் சிங்கள உத்தியோகத்தருக்குச் சாதகமாகவும் தமிழ் உத்தியோகத்தருக்குப் பாதகமாகவும் நடக்கிறதென்பதைப் பின்வரும் அட்டவணை நன்கு விளக்கும்:

| சிங்கள உத்தியோகத்தர் | தமிழ் உத்தியோகத்தர் |
| --- | --- |
| 1. தாய்மொழியில் மட்டும் கடமை ஆற்றலாம். | 1. தாய்மொழியில் மட்டும் கடமையாற்ற முடியாது. |
| 2. தமிழ்மொழிகற்கவேண்டியதில்லை. | 2. சிங்கள மொழியைக் கட்டாயம் கற்றுப் பரீட்சைகள் பலவற்றில் சித்தியடையவேண்டும். |
| 3. ஆங்கில ஆட்சிக் காலத்தில் சிங்களத்தில் கடமையாற்றியவர்கள் சிங்களத்தில் கடமை ஆற்றலாம். | 3. ஆங்கில ஆட்சிக்காலத்தில் தமிழில் கடமையாற்றியவர்களும் இப்பொழுது சிங்களத்தில் தேர்ச்சிபெறவேண்டும். |
| 4. ஆங்கிலம் கற்காமல் கடமையாற்றியவர்கள் இப்பொழுது தாய்மொழி அறிவுடன் கடமையாற்லாம். | 4. ஆங்கிலம் கற்காமல் கடமையாற்றியவர்கள் இப்பொழுது சிங்களத்தில் தேர்ச்சிபெறல் வேண்டும். |
| 5. ஆங்கில ஆட்சிக் காலத்தில் பலர் ஆரம்ப தமிழ் அறிவு பெறவேண்டும். ஆனால் இப்பொழுது தேவையில்லை. | 5. ஆங்கில ஆட்சிக் காலத்தில் ஆரம்ப சிங்கள அறிவுபெற வேண்டும், ஆனால் இப்பொழுது சிங்களத்தில் நல்லதேர்ச்சி பெறவேண்டும். |
| 6. பிற மொழி கற்காமல் பணியாற்றலாம். | 6. சிங்களம் கற்காமல் தொடர்ந்துபணியாற்ற முடியாது. |
| 7. பிறமொழித் தேர்ச்சியின்றிச் சம்பள ஏற்றம் பெறலாம். | 7. சிங்களமொழித்தேர்ச்சியின்றிச் சம்பள ஏற்றம் பெறல் முடியாது. |
| 8. பிறமொழித் தேர்ச்சிப் பரீட்சை சித்தியடையாமல் நிரந்தர உத்தியோகம் பெறலாம். | 8. சிங்களத்தேர்ச்சிப்பரீட்சைகள்பலவற்றில் சித்தியடையாமல் நிரந்தர உத்தியோகம் பெறமுடியாது. |

### அரசியலமைப்பின் மையம்

சிங்களம் மட்டும் சட்டத்தின் உள்நோக்கமே தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்களை மட்டுமன்றித் தமிழர் எல்லோரையும் படிப்படியாகச் சிங்களம் படிக்கச் செய்து ஒரு பௌத்த சிங்கள ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டுவதே, இந்தத் திட்டத்தை இன்று சிங்களக் கட்சிகள் எல்லாமே,—தமிழுக்குச் சமஉரிமை பெறப் போராடின கட்சிகள் உட்பட ஏற்றுக்கொண்டன; இந்தத் திட்டத்தை மையமாக வைத்தே அரசியல் அமைப்பு வரையப்பட்டது. இதனாலேயே தமிழரின் ஒத்துழைப்பைப் பெறுதற்கு அரசாங்கம் சிறிதும் முயலவில்லை.

இத்திட்டத்தின்படி முதலில் பௌத்த மதத்தையும் பின்னர் சிங்கள மொழியையும் திணிப்பதற்குத் தமிழ்ப் பகுதிகளில் பௌத்த தமிழ்ப் பாடசாலைகளைத் தொடக்குமாறு சிங்கள ஆட்சியாளர் சிறுபான்மைத் தமிழரைத் தூண்டினர். இவ்வாறு தொடக்கப்பட்ட பாடசாலைகளைச் சட்டத்துக்கு மாறாகக் கல்வி அமைச்சு அங்கீகரித்தது. இப்பாடசாலைகளில் சிங்களம் ஒரு பாடமாக நுழைக்கப்பட்டது. இப்பொழுது இப்பாடசாலைகளுக்குச் சிங்கள ஆசிரியர்களைத் தலைமை ஆசிரியர்களாக அனுப்பும் சூழ்ச்சித் திட்டம் வெற்றி கண்டுள்ளது. விரைவில் இப்பௌத்த தமிழ்ப் பாடசாலைகள் எல்லாம் பௌத்த சிங்களப் பாடசாலைகளாக மாறும்

பண்டிதர்
**இரத்தினம்**

காட்சியைத் தமிழர்கள் காணலாம்.

சிங்களத்தை ஒரு பாடமாகப் படிப்பதிலும் சிங்களம் மூலமாக எல்லாப் பாடங்களையும் படிப்பதால் சிங்களத்தில் திறமையான தேர்ச்சி பெறலாம். இதனால் ஆட்சியாளரை மகிழ்வித்து உத்தியோகம் பெறுவதற்கும் நல்ல வாய்ப்பு உண்டாகுமெனத் தமிழர்கள் சிலர் எண்ணி எல்லாப் பாடங்களையும் சிங்களத்தில் படிக்குமாறு தங்கள் பிள்ளைகளைத் தூண்டுவார்கள். இதனால் தமிழரைச் சிங்களவராக்கும் தங்கள் சூழ்ச்சித் திட்டத்தைப் படிப்படியாக நிறைவேற்றலாம் எனவும் அரசாங்கம் எண்ணுகிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

அனுபவ உண்மை.

## ஆங்கிலம் வந்தபோது அழியாததமிழ் சிங்களத் திணிப்பால் அழியுமா?

## அழியும்! அழியும்!! அழியும்!!!

கடந்த வாரம் புத்தளத்திலுள்ள சிறுகதை எழுத்தாள நண்பரொருவரைச் சந்திகக்ச் சென்றிருந்தேன். கொழும்பிலிருந்து புத்தளம் சென்ற புகையிரதத்தில் எனக்கு எதிர்ப்பக்கமாக ஒரு குடும்பம் இருந்தது. ஒரு தாய்; அவளின் மகள்; அந்த மகளின் இரு குழந்தைகள்.

இவர்களைப் பார்த்ததும் தமிழர் என எண்ணிக் கொண்டேன். உடுத்தியிருந்த உடுப்புக்கள் அசல் தமிழர்கள் என்பதை எனக்கு எடுத்தியம்பின. அத்துடன் அந்தத்தாயின் முகச்சாயல், யாழ்ப்பாணத்திலுள்ள மாதகல் வாழ் மக்களின் முகச்சாயலை ஒத்திருந்தது. மாதகல் மண் சாயலை முகம் அப்பட்டமாக எடுத்துக் காட்டவே பொழுதுபோக்கிற்குப் பேசுவதற்காக அந்தத் தாயை நீங்கள் மாதகலா என்றேன். அவள் சிங்களத்தில் ஆம் என்றாள். மீண்டும் தமிழில் மாதகலில் எந்தப் பக்கம் அங்குள்ள உறவினர்கள் யாவர் என்றெல்லாம் தமிழில் கேட்டேன்.

அதற்கு அந்தத் தாய் தனது தகப்பனார் தமிழர் என்றும் அவர் மாதகலில் வந்து புத்தளம் குடியேறியதாகவும், தமது தொழில் மீன் பிடித்தல் என்றும், தனக்கும் மாதகலுக்கும் இப்போ தொடர்பில்லை என்றும் தாங்கள் தமிழராக இருந்தும் சிங்களம்தான் பேசுவதாகவும், தனது பிள்ளைகள் சிங்களமே படிப்பதாகவும், தங்கள் வீட்டிலும் சிங்களமே பேசுவதாகவும், சிங்களத்திலேயே எழுதுவதாகவும் தெரிவித்தாள் அந்தப் பெண்.

எனக்கு அவள் பேச்சு ஆச்சரியத்தை அளித்தது. என்னுடன் பேசிக்கொண்டபோது ஒரு தமிழ் வார்த்தையையாயினும் அவள் சொல்லவில்லை.

நான் மீண்டும் கேட்டேன். "நீங்கள் தமிழ் இப்போ பேசா விட்டாலும் தமிழ் தெரியுமா? தமிழில் பேசுவீர்களா? நான் பேசும் தமிழ் உங்களுக்கு விளங்குகின்றதா?"

இக்கேள்விகளுக்கு அத்தாய் பதில் சொன்னாள். நீங்கள் பேசுவது எனக்கு விளங்குகின்றது. ஆனால் தமிழில் எனக்குப் பேச வராது. சிங்களத்தில் எப்போதும் பேசிவருவதால் கதைக்கும் போது சிங்களமே நாவில் வந்து விடுகின்றது. அத்துடன் தமிழில் நன்றாகப் பேசவும் எனக்கு மறந்து விட்டது என்றாள். உங்கள் மகளுக்குத் தமிழ் தெரியுமா? என்றேன். இல்லை இல்லை அவளுக்கு தமிழில் ஒரு வார்த்தையும் தெரியாது. தமிழில் சொன்னால் புரியவும் மாட்டாது என்றாள்.

அவள் மகளிடம் தமிழ் பேச முடியாதா? என்றேன். எனக்குத் தமிழ் தெரியாது என்று சிங்களத்தில் கூறினாள். நான் அம்மாவுடன் பேசும் தமிழ் கொஞ்சமாயினும் விளங்குகின்றதா என்று கேட்டேன். தமிழில் ஒரு சொல்லும் தெரியாது என்றாள்.

ஏன் நீங்கள் இருக்குமிடத்தில் தமிழர்கள் இல்லையா என்றேன். எல்லாரும் தமிழர்கள்தான். ஆனால் பேசுவது; படிப்பது எல்லாம் சிங்களம்தான் என்றாள்.

யாழ்ப்பாணத்திலிருந்து வியாபார நோக்கமாக வந்த தமிழ் குடும்பம் காலகதியில் சுற்றுப் புறச் சூழலால் எவ்வாறு சிங்களம் பேசும் தமிழராக மாறிவிட்டார்கள் என்பதை எண்ணி வியப்படைந்தேன். இவர்கள் குடியேறிய 25 வருட காலத்தில் சிங்களம் பேசி, சிங்களம் எழுதி, சிங்கள மக்களாகவே தம்மை ஆக்கி விட்டனர்.

இக்குடும்பத்தின் பிள்ளைகள் இன்னும் பத்தோ இருபதோ வருடத்தில் தாம் தமிழ் குடும்பத்தினரென்று சொல்வதையே விட்டு விடுவார்கள். இன்று இக்குடும்பம், அவர் தம் பிள்ளைகள் மறந்துதானும் ஒரு தமிழ் வார்த்தை பேச மாட்டார்கள். இன்னும் சில வருடத்தில் நாம் சிங்களவர் என இவர்கள் பெருமையுடன் கூறிக்கொள்வர்.

சிங்களம் பேசும் மக்களுடன் சேர்ந்து வாழ்ந்த இக்குடும்பம் சுமார் 25 வருடத்தில் தமிழ்மொழியை முற்றாக மறந்து விட்டது. தமிழ் தெரிந்தும் தமிழ் பேச அவர்களுக்கு வரவில்லை. பழக்க தோசம்தான் காரணம்.

இது போன்றதே தமிழ் பிரதேசத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமும் தமிழ் பாடசாலைகளில் சிங்களத் திணிப்புமாகும். உத்தியோகத்திற்கு சிங்களம் படிப்போம் என்றால், சிங்களம் தமிழை அழிக்காது என்று கூப்பாடு போட்டால் —சுமார் 50 வருடங்களில் வட கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் பள்ளிக்கூட மொழி சிங்களம். வீட்டுமொழி சிங்களம் இது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை. எனவே பாடசாலைகளில் சிங்களம் நுழைவதை, தமிழ் மாணவருக்குச் சிங்களத்தைத் திணிப்பதை ஆணிவேரோடு பிடுங்கி எறியவேண்டும்.

—அப்பலோ

# யாழ். மாநகரசபை நிர்வாகத்தை தமிழர் கூட்டணி கைப்பற்ற வேண்டும்!

## இதற்கு இன்றே ஆரம்பமாகட்டும் பணி!

குடியரசு நாளான மே 22ம் நாளில் யாழ்ப்பாண மாநகர சபையில் கறுப்புக் கொடி பறவாது சிங்கக் கொடி பறந்தது என்றால் அங்கு ஆட்சியில் இருப்போர் துரோகிகள் என்பது சொல்லாமலே விளங்கும். ஆனால் கூலைகளைக் களையாது தேர்தல் காலங்களில் அசமந்தமாக இருந்து விட்டுப் பின்னால் வருந்திப் பலன் என்ன?

யாழ் மாநகரசபைத் தேர்தல் எதிர்வரும் மார்கழி மாதத்தில் வருகிறது. நாட்டுப் பற்றுள்ள நல்லவர்கள் தேர்தல் களத்தில் குதிக்கவிருக்கும் இயக்கக் காளைகள் இப்போதிருந்தே தயாராக வேண்டாமா? வெள்ளம் வந்த பின் அணைகோலும் போக்கை இயக்கத் தலைவர்கள் இம் முறையும் கைக்கொள்ளக் கூடாது.

தமிழ் கட்சிகள் யாவும் ஒன்றிணைந்து கூட்டணி அமைந்துள்ளன. தமிழரசு தமிழ்க் காங்கிரஸ் ஆதரவாளர்கள் தான் சபையில் பெரும்பான்மையினர். ஆயினும் சிதறிய நெல்லிக்காய் போன்று சிதறுண்டுள்ள அவர்களில் பலர் இன்று எதிர்முகாமில் துரோகிகளுடன் கூடியுள்ளனர். இவர்களிடத்து மனமாற்றத்தைக் கொண்டுவர தமிழர் கூட்டணி முயல வேண்டும் முயற்சிபலன் தராவிட்டால் அவர்கள் பெயர்களையும் துரோகிகள் பட்டியலில் சேர்ந்துவிட்டதாக பிரகடனப்படுத்த வேண்டும்.

மீண்டும் தேர்தல் வரும் போது—இவர்கள் தமிழ்க் கட்சிகளில் வேட்பாளர் பட்டியலில் இடம்பெறுது தவிர்க்கவும் — தடுக்கவும் வேறுவழி கிடையாது.

மாநகர வட்டாரங்கள் தோறும் தமிழர் கூட்டணி பகிரங்கக் கூட்டங்களை நடத்தி மாநகர சபையில் நிலவும் நிர்வாக சீர்கேடுகள் ஊழல்களை மக்கள் மன்றத்துக்குக் கொண்டுவர வேண்டும். தேர்தல் வருமட்டும் காத்திருந்துபின்னர் இதைச் செய்வதாயின் கூட்டணியினர் கூற்றில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படமாட்டாது. காரணம் தேர்தலில் எதிர்பக்கத்தாரைத் தோற்கடிப்பதற்காகவும் தாம் ஜெயிப்பதற்காகவுமே அப்படிப் பிரச்சாரத்துக்காகச் சொல்லுகிறார்கள் என்று மக்கள் கருதுவர்.

ஆகவே, தேர்தலுக்கு வெகு காலத்துக்கு முன்பாகவே மேற்படி இயக்கம் தொழில்படவேண்டும். நிர்வாக சீர்கேடுகள், ஊழல்களால் மாநகரசபை நிறைந்திருப்பதால் மக்கள் முன் அலசப்படுவதற்கான பிரச்சினைகளுக்குப் பஞ்சமேயில்லை இயக்கத் தலைவர்களிடம் தான் ஊக்கம் அற்றுப்போய் விட்டது போல் தோன்றுகிறது.

[illegible]

நிறைவாகச் செய்யவில்லை. கிரமமாகச் செய்யவில்லை. ஆடிக்கு ஒருக்கால் அமாவாசைக்கு ஒருக்கால் சபையில் நிலவும் ஊழலை அம்பலப் படுத்தினால்போதாது. திட்டமிட்டு வாரந்தோறும் உள்ளூராட்சிமன்றங்களில் நிலவும் ஊழல்களை அம்பலப்படுத்தி இயக்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தால் நிலமை இப்படியாகியிருக்குமா என்று கேட்கப்படக் கூடியதாக நிலைமையை மாற்ற முனைய வேண்டும்.

இதை இனியாவது தமிழர் கூட்டணித் தலைவர்களும் சுதந்திரனும் ஏனைய இயக்க ஏடுகளும் செய்ய முன்வர வேண்டும். யாழ்ப்பாண மேயரின் சென்ற ஆண்டு பிறந்த நாள் விழாவில் சேர்க்கப்பட்ட பிச்சைகாரர் நிதி என்னவாயிற்று?

யாழ். மாநகரசபை ஆண்டுக்கு ஆண்டு யாழ். விநோத விளையாட்டு விழாக்கள்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களின்....

(2ம்-பக்கத் தொடர்ச்சி)

யப்பிரமாணம் செய்தவர்கள் அதன்படிதான் ஒழுகுகிறார்களா? இல்லவே இல்லை. சத்தியப்பிரமாணம் ஒரு சம்பிரதாயம்தான். ஏன்? என்று கேட்கத் தோன்றுகிறதா? பொய் சொல்ல மாட்டேன், உண்மையே கூறுவேன் என்று நீதிநிலையில் — நடுநிலையில் நிற்க வேண்டிய எத்தனையோபேர் சத்தியப்பிரமாணம் எடுக்கின்றார்கள்! ஆனால் நடைமுறையில் காண்பது என்ன? அவர்கள் அதன்படி ஒழுகுகிறார்களா?

இன்றுதான் நினைத்ததைத் தான்தோன்றித் தனமாக செய்யக்கூடிய நிலையில் உள்ளது இச்சிங்கள அரசு. எம். பிப் பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு இடைத் தேர்தலில் குதியுங்கள் என்றுதானே இவ்விளைஞர்கள் கேட்கின்றார்கள். இடைத் தேர்தல் நடைபெறாமல் இன்று எத்தனையோ தொகுதிகள் பின்போடப்பட்டு வருகின்றன. ஏதாவது நொண்டிச் சாட்டைச் சொல்லி எத்தனை ஆண்டுகளும் தேர்தல் நடத்தாமல் பின்போட இவ்வரசுக்கு யாரும் கற்றுக்கொடுக்க வேண்டியதில்லை!

சரி, வேண்டாம்; தேர்தல் தான் நடத்துகின்றது என்று வைத்துக்கொள்வோம்! அபேட்சகர் மனுப்பத்திரத்திலே மேற்படி சத்தியப் பிரமாணத்தினுள்ள வாசகங்கள் நிட்சயமாகக் குறிக்கப்படும். அதைச் செய்ய இவ்வரசுஒருகாலும் தவறாது அப்பொழுது அதை ஏற்றுக் கொண்டு கையொப்பம் இட வேண்டாமா? அல்லது வெற்றிபெற்றபின் சத்தியப் பிரமாணம்எடுப்பதில்லையா? அல்லது எம். பி. பதவிகளை விட்டு விலகியவர்கள் மீண்டும் தேர்தலில் குதிக்க முடியாது! என்று ஒரு சட்டத்தை — ஒரு முறையே அரசு கொண்டுவராதா? மூன்றில் இரண்டுபங்கு பலம் இருக்கின்றது என்ற தைரியத்தில் எதைத்தான் தமிழருக்கு எதிராகச் செய்யாது? இவ்வரசு.

எனவே இவற்றையெல்லாம் சிந்தித்திடும் போது ஒரே ஒரு உண்மை வெளிப்படையாகத் தெரிகிறது. எம். பிப் பதவியைத் துறந்தால் மீண்டும் எம். பிப் பதவிக்குப் போட்டியிடக் கூடாது இவ்வரசியல் சட்டத்தின் கீழ்! ஆனால் அதற்குத்தான் காலம் கனியவில்லையே! எம். பீப் பதவியின்றி வெளியில் நின்று ஒரு இயக்கத்தை நாம் வெற்றிகரமாக நடத்திடவே முடியாது!! இன்று கூட எமது ஒற்றுமையைச் சிதைக்க நடக்கும் நடவடிக்கைகளை நாம் நாள்தோறும் அறிவோம். அப்படியிருக்கும்போது சாதாரண மனிதர்களாய் நாம் ஒரு இயக்கம் நடத்துவோமெனின் அது நிட்சயம் முறியடிக்கப்படும் — அது மட்டுமன்றி அவ்வியக்கத்தின் பூரணமான கொள்கை விளக்கங்கள்பத்திரிகைகளில் இருட்டடிப்புச் செய்யப்படும்.

இதுமட்டுமல்ல—

ஒவ்வொரு தொகுதியில் இருந்தும் காட்டிக் கொடுக்கும் கயவர்கள் பாராளுமன்றம் (தற்போதைய தேசியப் பேரவை) செல்லவேண்டி வரும்! இது மேலும் ஆபத்தாக முடியும். எனவே எமது போராட்டம் வெற்றிபெற நிட்சயம் எமது பா. உக்கள் தேசியப் பேரவைக்குச் சென்றே ஆகவேண்டும். தேசியப்பேரவையும் ஒரு போராட்டக்களமாக இருந்தே ஆகவேண்டும். அதை இளைஞர்களாகிய நாம் ஆதரித்தே தீரவேண்டும் அடுத்த நடவடிக்கையை — கட்டளையை ஆவலுடன் எதிர்பார்த்தே இருக்கவேண்டும்! காலம் கனியும்!! கன்னித் தமிழ் அரியணை ஏறும்!!

---

## வளமோங்கும்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

எனவேதான் வவுனியா சுந்தானந்த இந்து இளைஞர் சங்கம் எல்லாரிடத்திலும், எல்லா இடத்திலும் ஆதரவு வேண்டி நிற்கின்றது. தனவந்தரும், நல்மனம் படைத்த, மற்றுமுள்ளோரும் நிறையப் பொருளுதவி செய்து இப்பெருநோக்கை நிறைவேற்ற உதவி புரிய வேண்டுமென்பது இச்சங்கத்தின் பணிவான வேண்டுகோளாகும். எதிர்கால இளைஞர்கள் தம்மை எதிர் நோக்கிவரும் புரட்சிகரமான காலமாற்றத்தை எதிர்த்து நின்று தமது சொந்த கலாச்சார நெறி முறையில் தமது வாழ்வை வளமாக்கி, வீரமுடன் பீடு பெற நிற்க இது உதவவேண்டும், என்ற தீர்க்கதரிசன நோக்கோடு இக்கட்டடத்தை இப்பொழுதே கட்டி முடிக்க இந்துப் பெருமக்கள் அனைவரையும் வவுனியா சுந்தரானந்த இந்து இளைஞர் சங்கம் கரங்கூப்பி வேண்டி நிற்கின்றது.

---

## மட்டு நகரில் சிங்களத் திணிப்பு முயற்சி முறியடிப்பு!

மட்டக்களப்பு அரசினர் கல்லூரியில் சிங்களத்தை ஒருபாடமாகப் போதிப்பது சம்பந்தமாக பெற்றோர் ஆசிரிய சங்கத்தின் சம்மதத்தைப் பெறுவதற்காக அண்மையில் கூட்டப்பட்ட கூட்டம் ஒன்று இளைஞர்களின் எதிர்ப்பால் பின்போடப்பட்டது.

இக்கூட்டம் மீண்டும் இவ்வார இறுதியில் நடைபெறும் போது சிங்கள ஆசிரியரை நியமிக்கக் கோரும் பிரேரணை மானம்மிக்கமட்டு நகர் பெற்றோர்களால் முறியடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

## சிங்களத்தில் பதவி முத்திரை!

சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி அதிபர் சிங்களத்தில் தமது பதவி முத்திரையைக் குத்தியது சம்பந்தமாக சுதந்திரனில் வெளிவந்த செய்தியையொட்டி திரு. மாலி என்பவர் நமக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் அரசபணியில் அனுப்பப்படும் கடிதங்களுக்கு கல்லூரி முதல்வர்கள் சிங்களத்திலேயே தமது பதவி முத்திரையை பொறிக்கவேண்டுமென கல்வித் திணைக்களத்தால் பணிக்கப்பட்டுள்ளதென்றும், அதன்படியே ஸ்கந்தா அதிபரும் சிங்களத்தில் முத்திரையை உபயோகித்ததாகவும் விளக்கியுள்ளார்.

---

## நாடு பிளவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முன் அரசுவிடுதலை செய்ய வேண்டும்; அல்லது அவர்களை நீதிமன்றத்துக்கு விசாரணைக்கு கொண்டுவரவேண்டும். இதைச் செய்ய அரசு தவறினால், மீண்டும். தமிழ் நாடு முழுவதும் கடையடைப்பு, துக்கதினம் அனுட்டிப்போம் அதைத் தொடர்ந்து நடைபெறும் கிளர்ச்சியில் அவர்கள் பிரம் பேருக்கு சிறையில் இடம் தேடும் கஷ்டம் அரசாங்கத்துக்கு ஏற்படலாம்.

---

## யாழ் ஆயரின் மறைவு!

இலங்கையின் முதலாவது தமிழ் மேற்றிராணியராக விளங்கிய அதி. வண. டாக்டர் ஜே. எமிலியானுஸ் பிள்ளை அவர்களின் மறைவு கேட்டு அதிர்ச்சியடைந்தோம்.

தேசபக்தியும், மொழிப் பற்றும், நிறைந்த மேற்றிராணியாரின் மறைவு குறிப்பாக கத்தோலிக்க மக்களுக்கும் சிறப்பாக தமிழ் மக்களுக்கும் பொதுவாக நாட்டு மக்களுக்கும் ஒரு பேரிழப்பாகும்.

கத்தோலிக்க மக்களின் துயரத்தில் நாமும் பங்கு கொள்கிறோம்.

— ஆசிரியர்

---

## கிறீஸ்துவுக்கும்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயகத்திற்கும், மத வழிபாட்டு சுதந்திரத்திற்கும் கொடுக்கும் கௌரவமாகும். பன்முறை கதிர்காமம் சென்று மடத்தொண்டில் ஈடுபட்டவர் என்ற முறையில் மேற்படி நியாயமான கருத்தில் எடுத்து மடங்களை அப்புறப்படுத்துவதை மட்டும் தீர ஆலோசித்து செய்யும் வண்ணம் அரசாங்கத்திற்கு ஒவ்வொரு இந்துவும் ஓர் வேண்டுகோள் சமர்ப்பிக்கும்படி கதிர்காம முருகன் பெயரால் தாழ்மையாக வேண்டிக்கொள்கிறேன்.

---

## ஒருமொழி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இக்கட்டான வேளையிலே எத்தலைவரும் பின்நிற்காது கூட்டணியுடன் சேர்வதுதான் இனத்திற்குச் செய்யும் தொண்டாகும். இதுவொரு கடைசிக்கட்டம். இவ்வேளையிலாவது வேகமாகச் செல்லும் எமது கூட்டணிப் புகை வண்டியில் எல்லோரும் ஏறிக்கொள்ள வேண்டும்: இடமில்லாவிடில் நடைபாதையிலே நின்றுவிடாது மிதிபலகையிலாவது தொங்கிக்கொண்டு எம்மோடு ஒரே புகை வண்டியில் பயணம் செய்ய வருமாறுபணிவுடன் அழைக்கின்றேன்: அதை விடுத்து வெளியில் நின்றுகொண்டு பத்திரிகை விவாதம் நடாத்தவேண்டாமென்று கேட்கின்றோம்.''

—இவ்வாறு உடுப்பிட்டிச் சிவா உரையாற்றினார்.

---

# வாக்குறுதிகளை அரசாங்கம் காற்றில்பறக்கவிட்டுள்ளது!

''நாம் பதவிக்கு வந்தால் எல்லாப் பொருட்களினதும் விலைகளைக் குறைத்து, பொது மக்களின் வாழ்க்கையைச் சிறப்பிப்போம், மக்களின் மத்தியிலே தலைவிரித்தாடும் அத்தனை பிரச்சினைகளையும் தீர்த்துக்கட்டி, பட்டினியால் வாடும் ஏழை மக்களின் கண்ணீரையும் துடைப்போம்; வாழ்க்கைச் செலவைக் குறைத்து மக்களனைவரையும் சுபிட்ச வாழ்வு வாழ வைப்போம் என தேர்தல் காலத்தில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை மக்கள் அரசு இன்று காற்றிலே பறக்க விட்டுவிட்டது. தம்மால் செய்ய முடியாத பொய் வாக்குறுதிகளை மக்களுக்கு அளித்து விட்டே அது ஆட்சி பீடம் ஏறியுள்ளது அரசு. அன்று மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதன் காரணமாக இன்று மக்கள் பல பிரச்சினைகளுக்கு ஆளாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.''

ஹக்மன் இ. போ. ச. இ.ஈ டிப்போ ஊழியர்களின் விசேட கூட்டம் ஒன்றில் பிரதம அதிதியாகக கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அக்குரஸ்ஸ நாடாளுமன்ற உறுப்பினரும், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவருமான டாக்டர் திரு. எஸ். ஏ. விக்ரமசிங்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.


வாங்கிவிட்டீர்களா!

மக்கள் திலகம்'பாரத்'எம். ஜி. ஆர். புகழ் பரப்பும் புதுமைக் கிண்ணம்!



உதயம்

விலை சதம் 30

இம் மாத இதழ் வெளிவந்து விட்டது! சுவையான செய்திகளுடன் எங்கும் வேகமாக விற்பனையாகின்றது!

தனிப்பிரதி வேண்டுவோர் 40 சதம் முத்திரை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விற்பனையாளர்களுக்கு தக்க கழிவு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டியது;—

நிர்வாகி 'உதயம்' 137/2 சென் ஜேம்ஸ் தெரு, கொழும்பு-15



''எந்த வீட்டில் ஒரு புத்தகசாலை இருக்கின்றதோ அந்த வீட்டில்தான் உயிர் இருக்கிறது.''

—பிளட்டோ.

மில்க் வைற் தயாரிப்புக்களின் மேலுறைகளை அனுப்பி அறிவு நூல்களை வாங்கிப் படியுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை

த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்.



மதன சஞ்சீவி லேகியம்

அதிக ஆண் சக்தி விரயமாகியதால் உடல் மெலிந்து கன்னங்களில் குழி விழுந்து எலும்பும் தோலுமாய்த் தோற்றமளிக்கிறீர்களா? கவலை வேண்டாம். எமது சக்திவாய்ந்த மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட ''மதன சஞ்சீவி'' லேகியத்தைப் பாவித்து இழந்த சக்தியையும், பலத்தையும், முகவசீகரத்தையும் மீண்டும் பெறுங்கள். இல்லற வாழ்க்கைக்கு இணையற்ற சஞ்சீவி இதுவே. நீரிழிவு, பிளட் பிரசர் உள்ளவர்களுக்கும் சிறந்தது. ஒரே புட்டியில் குணம் காணலாம்.

1 ருத்தல் ரூ. 23/— ½ ருத்தல் ரூ. 12/— வி. பி. பி. ஆடர் கவனிக்கப்படும்.

மதன லேபனம்

ஜீவ நரம்புகளின் பலவீனத்தைப் போக்க சிறந்த ஔஷதம்.
வெளிப்பூச்சு மருந்து விலை ரூபா 5/50.

வைத்தியம்

எவ்வளவு நாள்பட்ட வியாதியானாலும் சரி, பிற வைத்தியங்கள் செய்து குணப்படாமல் கைவிடப்பட்டதானாலும் சரி, ஊசி ஏற்றிக் குணப்படாமலிருந்தாலும் சரி, (ஆண்-பெண் ரகசிய நோய்கள்) இனி காலதாமதம் செய்யாமல் நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வரமுடியாது போனால் கடிதமூலம் தொடர்பு கொள்ளுங்கள். ஆலோசனை இலவசம்.

வைத்தியராஜ் K. சிவசுப்பிரமணியம், M. I. H. S. M. P.

[illegible]னந்தா வைத்தியசாலை

104, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன்துறை பட்டினசபை....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

...வில்லையென்றும் பத்திரிகைகளில் செய்தி வந்திருந்தது.

## அடிமைத்தனம்

அது பற்றிப் பட்டினசபை உறுப்பினர் ஒருவரிடம் இளைஞர்கள் விசாரித்த போது அவ்வாறு தீர்மானம் நிறைவேறவில்லையென்றும் தலைவருக்கு எவ்வித அதிகாரமும் வழங்கவில்லையென்றும், தேசியப் பேரவைக்குத் தமிழர் கூட்டணிப் பா. உ. க்களைச் செல்ல வேண்டாம் என்று மட்டும் தீர்மானம் நிறைவேறியதாகவும், பத்திரிகைகள் பிழையாக செய்தி வெளியிட்டு விட்டதாகவும் அதற்கு மறுப்புத் தெரிவித்து அறிக்கை விடப் போவதாகவும் கூறினர். தமிழர்க்கு விடுதலை கிடைக்கும் வரை பறக்கவிடப்பட வேண்டும் என்ற கறுப்புக்கொடியைத் தமிழர் கூட்டணியினர் பேரவை செல்வதற்காக இறக்குவதானால் இளைஞர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்லவேண்டிவரும் என்றும், கூட்டணியினரைப் பேரவைக்குப் போக வேண்டாம் என்று கோரும் தீர்மானத்தை நிறைவேற்றினால் பரவாயில்லை — அதைச் சாட்டாக வைத்து அவர்கள் போவதானால் கொடி இறக்கப்படும் என்பது உங்கள் அரசியல் அடிமைத்தனத்தைத்தான் வெளிப்படுத்தும் என்றும் இளைஞர்கள் அவரிடம் எடுத்துரைத்தனர்.

ஆனால் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது கறுப்புக்கொடி இறக்கப்பட்டது. இதனைக் கண்டு இளைஞர்கள் கொதித்து நிற்கிறார்கள். ஒருவரின் சதித்திட்டம் நிறைவேறி விட்டதைக் கண்டு ஏனையோர், அந்த ஒருவரின் பகடைக்காய்களாக, கைப்பொம்மைகளாக மாறிவிட்டார்களா? என்று இளைஞர்கள் உணர்ச்சியுடன் கேட்கின்றனர். அமைச்சரின் அடிமைக்கு ஆலவட்டம் பிடிக்கின்றனர் மற்றைய பிரதிநிதிகள் என்று ஆவேசப்படுகின்றனர் அவர்களைத் தேர்ந்தனுப்பிய வாக்காளர்கள்!

## கொள்கையற்றவர்கள்

தமிழர் கூட்டணியின் தீர்மானத்துக்கும் பட்டினசபைத் தீர்மானத்துக்கும் என்ன தொடர்பு இருக்கிறது? தமிழர் தலைவர்கள் ஒன்று சேர்ந்து கூட்டணியமைத்து ஒன்றுபட்ட குரலில் உரிமைக் குரல் எழுப்புகின்ற வேளையில் அவர்களின் அரசியல் தந்திரத்தை உணராமல் அவர்கள் கூட்டணியை முறியடிக்கும் நோக்கில் இந்நாட்டுத் தேசியப் பத்திரிகைகளும், அன்னைத் தமிழை விலை கூறும் அடிமைகளும் முனைந்து நிற்கின்றனர். ஒன்றுபட்ட தமிழினத்தைப் பிரித்தழிக்கச் சதி செய்தால் அந்தச் சதிக்கு அந்தச் சதிக்கூட்டமே ஆளாக நேரிடும் என்பதை அரசியல் அநாதைகளுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு வாதத்துக்காகத் தமிழர் கூட்டணியினர் பேரவைக்குச் சென்றது பிழையென வைத்துக் கொண்டாலும் பட்டின சபைக் கறுப்புக்கொடியை ஏன் இறக்க வேண்டும்? அவர்கள் பிழைவிட்டால் அவர்களுக்குத் தகுந்த வழி கூற வேண்டும் அல்லது அவர்களை விட்டுவிட்டு தமிழினத்திற்கு விடுதலை கிடைக்கும் வரை பட்டினசபைத் தலைவரோ அல்லது மற்றையோரோ தமிழினம் விடுதலை பெறக்கூடிய நல்ல செயற்திட்டங்களைச் சமர்ப்பித்து விடுதலைக்காகப் போராட வேண்டும். அதைவிடுத்து உணர்ச்சிப் பிழம்புகளான இளைஞர்களின் குரலுக்குச் செவிமடுக்காது தானும் ஒரு தமிழ் மகன்தான் தனக்கும் தமிழர் உரிமை பெறவேண்டும் என்ற ஆசை உண்டு என்று ஆத்திரத்தில் அன்று கூறியவர்கள் இன்று அவற்றையெல்லாம் மறந்து தாமும் தன்னைச் சேர்ந்தவர்களும் கொள்கைத் திட்டம் அற்றவர்கள் என்பதனைத் தமது முன்னுக்குபின் முரணான தீர்மானங்களால் நிறைவேற்றிவிட்டனர் என்று மக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

எனவே மக்கள் விருப்பை மதித்துக் கறுப்புக் கொடியை மீண்டும் ஏற்றி தமது விடுதலை உணர்ச்சியைக் காட்டுமாறு பட்டினசபை உறுப்பினர்களை வேண்டிக் கொள்கிறேன்.

## சலுகை வேண்டாம் உரிமை வேண்டும்

இறுதியாக ஒன்று கூற விரும்புகிறேன். தலைவரோ மற்றையவரில் எவரோ எமது பட்டினசபையை மக்கள் விருப்புக்கு மாறாக ஆட்சியாளரின் அடிமைச் சபையாக மாற்ற விரும்பினால் அது அவர்களது அரசியல் அழிவில்தான் போய் முடியும் என்பதை அவர்கள் நினைவிற் கொள்ள வேண்டும்! அவர்களை அந்தச்சபையிலிருந்து தூக்கி எறிய வேண்டிய நிலைதான் ஏற்படும்! இதனை மனதிற் கொண்டு உண்மையான தன்மானமுள்ள, உணர்ச்சியுள்ள தமிழர்களாக மாறி தொடர்ந்து தமிழினத்தின் விடுதலைக்காகக் குரல் கொடுங்கள்! உங்கள் பின்னே உணர்ச்சியுள்ள இளைஞர்கள் திரண்டு வருவார்கள். அதை விடுத்துத் தலைவர்களைக் குறைகூறுவதோடு தமிழினத்தைக் காட்டிக் கொடுக்கும் கயமைத்தனத்தில் இறங்குவீர்களானால் அதனைத் தமிழினம் சகித்துக் கொண்டிருக்காது! எமக்குச் சலுகைகள் வேண்டாம்! உரிமைகள் தான் வேண்டும் இதுவே இன்றைய தமிழினத்தின் ஒன்றுபட்ட குரல்!

எனவே இந்தக் குரலுக்கு மதிப்புக் கொடுத்து காங்கேசன்துறைப் பட்டினசபையும் தன்மானச் சிங்கங்களின் உறைவிடம்! இங்கே சிறு நரிகளுக்கு வேலை இல்லை! என்பதை விரைவில் நிரூபித்துக் காட்ட வேண்டும். அந்த நன்னாளை பட்டின சபை வாக்காளருடன் சேர்ந்து ஈழத் தமிழகமே எதிர்பார்த்து நிற்கிறது!

இக்கட்டுரை எழுதி முடிக்கும் நேரத்தில் பட்டின சபை பற்றிய நல்ல செய்தி ஒன்றைப் பத்திரிகைகளிற் படிக்க முடிந்தது. சபையின் நடவடிக்கைகள் யாவும் தமிழ் மொழியிலேயே நடக்கவேண்டும் என்ற கொள்கைக்கிணங்க, தனிச் சிங்களத்தில் அரசினரால் அனுப்பப்பட்ட கடிதங்களை அவர்களுக்கே திருப்பியனுப்பித் தமிழிற் பதிலளிக்குமாறு கேட்டதையிட்டுத் தலைவருக்கும் ஏனைய உறுப்பினர்களுக்கும் தமிழினத்தின் பாராட்டுக்கள் உரித்தாகட்டும்! இதுபோன்ற உரிமைப் போராட்டத்தில் பங்குகொண்டு தமிழினத்துக்கு விடுதலை கிடைக்க வழி தேடுமாறு தலைவரையும் மற்றைய பிரதிநிதிகளையும் தமிழினம் தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறது.

---

### உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் "உயிர் தமிழுக்கு" நூலிருந்து:

# தமிழை மறப்பேனா?

பட்டினி கிடந்து பசியால் மெலிந்து
பாழ்பட நேர்ந்தாலும், — என்றன்
சுட்டுடல் வளைந்து கைகால் தளர்ந்து
கவலை மிகுந்தாலும் — வாழ்வு
கெட்டு நடுத் தெருவோடு கிடந்து
கீழ் நிலையுற்றாலும் — மன்னர்
தொட்டு வளர்த்த தமிழ் மகளின் துயர்
துடைக்க மறப்பேனா?

நோயில் இருந்து மயங்கி வளைந்து
நுடங்கி விழுந்தாலும் — ஓலைப்
பாயில் நெளிந்து மரணமடைந்து
பாடையில் ஊர்ந்தாலும் — காட்டுத்
தீயில் அவிந்து புனலில் அழிந்து
சிதைந்து முடிந்தாலும் — என்றன்
தாயில் இனிய தமிழ் மொழியின் துயர்
தாங்க மறப்பேனா?

பட்டமளித்துப் பதவி கொடுத்தொரு
பக்கம் இழுத்தாலும் — ஆள்வோர்
கட்டி அணைத்தொரு முத்தமளித்துக்
கால்கை பிடித்தாலும் — என்னைத்
தொட்டு விழுந்து வணங்கி இருந்தவர்
தோழமை கொண்டாலும் — அந்த
வெட்டி மனிதர் உடல்களை மண்மிசை
வீழ்த்த மறப்பேனா?

பொங்கு வெறியர் சிறை மதிலுள் எனைப்
பூட்டி வதைத்தாலும் — என்றன்
அங்கம் பிளந்து விழுந்து துடிக்க
அடிகள் கொடுத்தாலும் — உயிர்
தொங்கி அசைந்து மடிந்து தசையுடல்
தூள்பட நேர்ந்தாலும் — ஒரு
செங்களம் ஆடி வரும் புகழோடு
சிரிக்க மறப்பேனா?

---

# சிங்களம்—செந்தமிழ் அழிக்கும்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

### சிங்கள மோகம்

சிங்களம் ஆட்சிமொழியாக இருப்பதாலும், தமிழர்கள் தம்முடைய தாய் மொழியில் கல்வி கற்று அரசாங்கப் பணிப்பாளர்களாகச் சேர்ந்த பின் கட்டாயமாகச் சிங்கள மொழிப்பரீட்சைகள் பலவற்றில் சித்தியடைய வேண்டியிருப்பதாலும் சிங்களத்தை இரண்டாவது மொழியாக மட்டுமன்றிச் சிங்களத்தின் மூலமே எல்லாப் பாடங்களையும் படிக்கத் தமிழர்கள் சிலர் ஊக்கப்படுகின்றனர். இவ்வாறு தமிழர்களே தமிழைப் புறக்கணிக்கும் நிலைமை சிங்களம் மட்டும் ஆட்சிமொழியாக இருக்கும்வரை உருவாக்கிக்கொண்டே இருக்கும்.

அரசாங்கப் பணிப்பாளர் எல்லோரும் சிங்களத்திற் போலத் தமிழிலும் தேர்ச்சி பெற வேண்டும் எனும் நியதி விதிக்கப்பட்டாலன்றித் தமிழர் சிலரின் சிங்கள மோகத்தைத் தடுக்கமுடியாது. இதனை ஓரளவுக்குக் கட்டுப்படுத்துதற்குத் தமிழே தமிழ் மாணவர்களுக்குக் கல்வி ஊட்டும் மொழியாக இருத்தல் வேண்டுமென விதிக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டோம். அரசாங்கம் இதனை மறுத்துவிட்டது. பெற்றோர் விரும்பும் மொழியில் கல்வி ஊட்டலாம் என்று மட்டுமே விதித்துள்ளது. இந்த விதிப்புத் தமிழருக்குச் சிங்களம் மூலம் கல்வியூட்டுதல் ஊக்குவதற்காகவே திட்டமிட்டுச் செய்யப்பட்டது.

தமிழரைச் சிங்களம் படிக்கத் தூண்டித் தமிழை ஒழித்துச் சிங்களத் தமிழ்ப்பகுதிகளில் விரைவில் ஆட்சிமொழி ஆக்குதற்கே கல்வி அமைச்சர் தமிழ்ப் பாடசாலைகளிலும் கலலூரிகளிலும் சிங்களத்தைத் திணிக்க இரவுபகலாக முயல்கின்றார். தமிழ் மக்கள் எல்லோருக்கும் சிங்களம்தெரியுமெனின் தமிழ்மொழி பெயர்ப்பைக் கொடுக்காமல் விடலாம் தானே! தமிழ்மொழி பெயர்ப்பை இப்பொழுது கொடுப்பதைக் கட்டாயப்படுத்தக்கூட அரசாங்கம் சிறிதும் விரும்பவில்லை.

### செய்யப்படல்வேண்டும் செய்யலாம்

இதனாலேயே அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் அவருடைய முக்கூட்டு அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களும் இந்தத் தமிழ்மொழிப் பிரமாணங்களில் உள்ள 'செய்யப்படல் வேண்டும்' (SHALL) என்பதைச் ''செய்யலாம்'' (MAY) என மாற்றவேண்டும் என்று அன்று 1966இல் போராடினார்கள்: இன்றும் அதனையே வற்புறுத்துகிறார்கள். ஆட்சியாளர் விரும்பினால் தமிழில்மொழிபெயர்ப்பைக் கொடுப்பார்கள். அப்படி அவர்கள் கொடுப்பதைத் தமிழர்கள் ஏற்று அவர்களின் காலைப்பிடித்துத் துதிபாடிக் கொண்டிருக்க வேண்டும். வசதியில்லாவிடில் எதனையும் தமிழில் கொடார்கள். தமிழில் கொடுங்கள் என்று வற்புறுத்தும் உரிமை தமிழருக்கு இல்லை.

''ஆளுகின்ற சிங்கள இனம் தங்கள் வசதிப்படி விரும்பினால் போடுகிற பிச்சையைத் தமிழினம் ஏற்றுக்கொள்ள வேண்டுமே ஒழிய சட்டம் பேச—மொழி உரிமையைத் தட்டிக் கேட்க—அடிமைகளான தமிழினத்துக்கு இந்நாட்டில் அதிகாரம் இல்லை. அத்தகைய அதிகாரத்தைக் கொடுக்கமாட்டோம்'' என்பதே ஆட்சியாளர் [illegible] இத்தகைய கொள்கையை இந்தப் புதிய அரசியலமைப்பு நிலைத்த நிரந்தரமான கொள்கையாக ஆக்கித் தமிழரின் அடிமைச்சாசனத்தை வரைந்துள்ளது.

### நீதிமன்றத்துக்கு போங்கள்

இந்தத் தமிழ்ப் பிரமாணங்களின்படி ''அரசாங்கத்துக்குத் தமிழில் எழுதினால் தமிழில் மறுமொழி பெறத் தமிழ் மக்களுக்கு உரிமையுண்டு. எனவே மொழிபெயர்ப்பை ஏற்கமாட்டோம்.'' என்று நான் பாராளுமன்றத்தில் வற்புறுத்தினேன். ''இவ்வாறு உரிமையில்லையென்றும்; உரிமையிருக்கிறதென்று ஊர்காவற்றுறைப் பிரதிநிதி கருதினால் அதனை நிலைநாட்டுதற்கு நீதிமன்றம் செல்லலாம்'' என்றும் அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பாராளுமன்றத்திலே 30.11.71ல் எனக்கு விடை கூறினர்.

சட்டங்கள் போதிய உரிமையைக் கொடுக்கவில்லை என்று கருதினால் அவற்றைத் திருத்தவேண்டிய கடப்பாடும் அதிகாரமும் உடைய அரசாங்கம் வழக்குத் தொடர்ந்து பாருங்கள் என்று கூறுவது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்ற கொடுமை மட்டுமன்றி எங்களுக்கு எவ்வித உரிமையையும் அரசாங்கம் தராது என்பதை உறுதிப்படுத்துவதுமாகும்.

—தொடரும்.

---

# யாழ் நகரசபை...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தி வருகிறதே? இவற்றின் கணக்குகள் எப்போதாவது கணக்காய்வாளர் திணைக்களத்தால் பரிசீலனை செய்யப்பட்டதுண்டா? இல்லையெனில் ஏன்? இக்கணக்குகள் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்பட்டமை பற்றி கணக்காய்வாளர் நாயகம் சம்பந்தப்பட்ட ஆண்டுகளின் கணக்குப் பரிசோதனை மாநாடுகளில் கண்டிப்புத் தெரிவித்துள்ளாரா? அப்படியாயின் மாநகரசபைக்கு அப்பாற்பட்ட கணக்காயின் அந்தத் தில்லுமுல்லு வேலையில் சபை எதற்காக தன்னையும் தனது ஊழியர்களையும் சம்பந்தப்படுத்திக்கொள்ள வேண்டும்?

யாழ். விநோதக்களியாட்டு விழாக்களால் இதுகாறும் சேர்ந்த தொகைகள் யாவும் நிறைவாக பொதுசன நூலக நம்பிக்கை நிதிக்கு மாற்றப்பட்டுள்ளதா? அல்லாவிடில் ஏன் மாற்றப்படவில்லை. மாற்றப்படாத தொகைகள் நம்பிக்கை நிதிக்கு மாற்றப்பட மேயர் ஏதும் நடவடிக்கை எடுத்துள்ளாரா?

இந்நிலையில் பிறிதோர் களியாட்டு விழா யாழ்ப்பாணத்தில் அவசியமா? பணப் பஞ்சத்தால் மக்கள் ஆவாய்ப் பறக்கும்போது களியாட்டு விழாவில் சூதாட்டம் இடம் பெறுவது, பெண்டு பிள்ளைகளின் நகைநட்டுக்கள் நகை அடவுபிடிக்கும்வட்டிக்கடைகளுக்குப் போய் சேருவதற்கா? துரையப்பா விளையாட்டரங்குக்கு பணம் சேர்ப்பதில் இப்படியும் ஒரு விளையாட்டா? சூதுவாது இல்லாது பணம் சேரவே சேராதா?

இப்படி ஆயிரமாயிரம் உண்டு கேட்பதற்கு எழுதுவதற்கு! பண்டிதர் மட்டும் தானா பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்ப வேண்டுமா? சுதந்திரன் ஆசிரியர் எழுப்பும் வினாக்களையாவது பாராளுமன்ற உறுப்பினர் சபையில் எழுப்பலாம் அல்லவா?

—சேகர்.
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிறீஸ்துவுக்கும் முற்பட்ட தலம் கதிர்காமம்!

## புனிதநகர்த் திட்டத்தால் தர்ம ஸ்தாபனங்களுக்கும் ஆபத்து!

### மதசுதந்திரம் பறிக்கப்படுவதை ஒவ்வொரு இந்துவும் எதிர்க்க வேண்டும்!

இலங்கை வாழ் சகல மக்களாலும் மற்றும் வெளிநாட்டவர்களாலும் சாதி, மத, பேத மின்றியும், இன் மொழி வேறுபாடின்றியும், உயர்வுதாழ்வின்றியும் தூய மனப்பான்மையுடன் இறைவனை வழிபாடுசெய்யும் இடம் இலங்கையில் கதிர் காமஸ்தலம் ஒன்றே ஆகும்.

இத்தலம் இந்துக்களும் பௌத்தர்களும் இஸ்லாமியரும் மற்றும் ஏனைய மதத்தவர்களும் வழி பாடாற்றி சகோதரத்துவத்தையும், ஒற்றுமையையும், அன்பையும், நல்மனப்பான்மையையும் ஏற்படுத்தி மத இன மொழிப்பூசல்களை எல்லாம் களைந்தெறியுமிடமாக விளங்குகின்றது. இத்தலத்துக்கு நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்கள் வழிபாட்டிற்காக வந்து செல்கின்றார்கள். அவர்கட்கு தங்குமிடம் உணவு வசதிகளையும் ஓய்வையும் அளிப்பதற்கு தர்மஸ்தாபனங்களாகிய மடங்களே உதவியாக இருக்கின்றன என்பது சகலரும் அறிந்த விடயமாகும். இந்நிலையில் தற்சமயம் அமுலுக்கு வந்துள்ள புனிதநகர் திட்டத்தின் படி (18-2-72) வர்த்தமானி மடங்களும் தர்மஸ்தாபனங்களும் அகற்ற இருப்பதாக தெரிகின்றது.

இது விடயத்தை அரசு மீண்டும் திரயோசனை செய்யும் வண்ணம் தாழ்மையுடன் வேண்டுகின்றோம். ஏனெனில் நாட்டில் ஒற்றுமையையும் மொழி இன மத பூசல்களையும் அகற்றி பரஸ்பர நல்லெண்ணத்தைவளர்ப்பதற்கு இத் தர்ம ஸ்தாபனங்கள் பெரிதும் மூலகாரணமாக அமைந்துள்ளன என்பது கண்கூடு. மற்றும் மடங்களிலும் வழிபாட்டிற்காக வேண்டிய ஆலயங்களே முக்கிய இடம்பெறுகின்றன. எனவே மடங்களும் கோவில்களும் சமானமாகவே அமைந்துள்ளன. புனித நகர்திட்டத்தின் படி மடங்களை அகற்றுவது கோவில்களை அகற்றுவதற்கு சமானமாகும். மேலும் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்ட இவ்வேளையில் மடங்களை அகற்றுதல் மத சுதந்திரத்தை அகௌரவப் படுத்துவதாகும். ஆகவே தாங்கள் இவ்விடயத்தை முன்னிட்டு மீண்டும் திரயோசனை செய்து முடிவுக்கு வருவது சிறந்ததாகும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற இடம் கதிர்காமம் ஒன்றே. இவ்வித சிறப்புவாய்ந்த இடத்திற்கு மிக்கச்சிறப்பையும் பக்தியையும் ஏற்படுத்த மூலகாரணங்களாக அமைவது தர்ம ஸ்தாபனங்களே. இத்தகைய தர்ம ஸ்தாபனங்களை ஏற்படுத்த தர்ம சிந்தையும், தெய்வகடாச்சமும், தீர்க்க தர்சனமும் நிறைந்த தவசிரேஸ்டர்களே முன்னின்று ஏற்படுத்தியுள்ளார்கள்.

அக்காலத்தில் எதுவித வசதியும் அற்ற சூழ்நிலையில் பல்லாயிரக்கணக்கான பெறுமதிவாய்ந்த பொருட்களை காட்டுடாகக் கொணர்வித்து மிகுந்தகஷ்டத்தினூடே இத்தர்ம ஸ்தாபனங்களை நிறுவி யாத்திரிகர்க்கு உதவிபுரிந்து வந்தார்கள். இத்தகைய தர்ம ஸ்தாபனங்களை நிறுவி யாத்திரிகர்கட்கு உதவிபுரிந்துவந்தார்கள். இத்தகைய தர்ம ஸ்தாபனங்கள் இன்றும் தர்மத்தை நிலைநாட்டவே செயற்பட்டு வருவது கண்கூடு. எனவே இத்தகைய தர்ம ஸ்தாபனங்களை அப்புறப்படுத்தியுள்ள திட்

**இ. குமாரசாமிசர்மா**
(ஸ்ரீ சடையம்மா மடசபை)

டத்தை பல மத தலைவர்களையும் பெரியார்களையும் கலந்தாலோசித்து ஆராய்ந்து முடிவுக்கு வருவதே சமயப்பாதுகாப்பிற்கு கொடுக்கும் கௌரவமாகும்.

கதிர்காமம் கிறீஸ்துவுக்கு முன் பல்லாண்டு முற்பட்ட காலம் என்பது சரித்திரம் கூறும் உண்மை. அத்தோடு அக்காலத்திலேயே மத, இன மொழி வேறுபாடின்றி பல சமூகத்தவரும் வழிபாடாற்றினர் என்பதை மகாவம்சம் தெற்றென தெரியவைக்கின்றது. இவ்விதம் பலவித கலாச்சாரத்தையும் பல இன மொழி மக்களும் பரிவர்தனை செய்யும் இடமாக அமைந்ததால் ஒற்றுமை வளர்ச்சியடைய இத்தர்ம ஸ்தாபனங்கள் பெரிதும் உதவின என்பது வெள்ளிடைமலை. இத்தகைய கலாச்சாரத்தையும் மத, மொழி ஆராச்சிக்குரிய ஆராச்சிக்கூடமாக விளங்கும் தர்ம ஸ்தாபனங்களை அப்புறப்படுத்தும் விடயத்தை திரயோசித்து முடிவுக்கு வரும் கால தாமதத்தால் எதுவித குறையும் ஏற்படப்போவதல்லவா?

இத்தலத்தில் அனேக மதத் தலைவர்களும் பெரியார்களும் இறைவனை வழிபாடுசெய்தனர். இத்தகைய பெரியார்களில் சிலர் தெய்வ சக்தியாலும் தர்மவான்களின் உதவியுடனும் தர்மஸ்தாபனங்களை ஏற்படுத்தி நாட்டின் பாதுகாப்பிற்கும் பொருளாதார சுபீட்சத்திற்கும் தெய்வ கிருபையை பெற்றார்கள். இத்தகைய பெரியார்களாலேயே நாட்டில் நீர்வளம், நிலவளம் சகோதரத்துவம் சிறந்து விளங்கியது.

இலங்கையை ஆட்சிபுரிந்த அரசர்கள் பலர் தமது ஆட்சிக்காலத்தில் நாட்டில் பொருளாதார அரசாட்சியில் இடையூறு ஏற்படாது தடுப்பதற்காக பூசைவழிபாடுகளை இப்புனித தலத்தில் தான் செய்தார்கள் என்பது சரித்திர உண்மை.

இத்தகைய, மூர்த்தி ஸ்தலம், தீர்த்தம் என்பவற்றால் சிறப்புப் பொருந்திய கதிர் காமத்தில் உள்ள தர்ம ஸ்தாபனங்களை அகற்றும் விடயத்தை தீர ஆலோசித்து ஓர் குழுவை நியமித்து பல இன, மத தலைவர்களையும், தர்ம ஸ்தாபனங்களின் நிர்வாகஸ்தர்களையும் கூட்டி கருத்துக்களை அறிந்து முடிவுக்கு வருவதே சாலச்சிறந்ததாகும்.

(7ம் பக்கம் பார்க்க)



## தமிழ்வாழத் தருக அருள் கந்த வேளே!

'ஒருகால் நினைக்கின் இரு காலும் தோன்றி'
'ஓம் முருகா!' என நின்பேர் ஓதுவார்க்கு
வருவினைகள் தீர்த்து அருள்—பொருளையீந்து
வழிநடத்தி முத்திப்பே றருளும் ஞானத்
திருமுருகா! அஞ்சுமுகங் கொள்பக்தர்க்குத்
திடமளித்து ஆறுமுகங் காட்டும் வேலா!
பெருகுக சுப் பிரமணியா! தமிழினத்தின்
வாழ்வுயர்த்துங் கதிர்காமக் கந்தவேளே!

தமிழருள்ளத் துள்ளுறைந்து தமிழ்த்தெய்வம் நீ
தமிழ்வாழத் தமிழுணர்வைத் தமிழர்க்கூட்டி
தமிழ்பேசித் தமிழெழுதித் தமிழின்பத்தைத்
தமிழர் துய்த்தும்...தமிழர்களாய் இறப்பதற்கும்...
அமிழ்தினிய மாணிக்கக் கங்கைத்தீர்த்த
மாய்த்தமிழர் தமிழ்நெஞ்சந் தெளிவதற்கும்
தமிழீழம் சந்ததமும் வாழ்வதற்கும்
தருக அருள் கதிர்காமக் கந்தவேளே!

—"வன்னியூர்க் கவிராயர்"

## வளமோங்கும் வவுனியா மாநிலத்துக்கு மத்திய இந்து கலாச்சார நிலையம்

வவுனியா மாநிலத்தில் இந்து மக்களுக்கென மத்திய கலாச்சார மண்டபம் ஒன்று இல்லாதது ஓர் பெருங் குறை. வவுனியா இந்து இளைஞர் சங்கம் இக்குறையை நிவிர்த்திக்க உறுதி பூண்டுள்ளது. ஈழத்தாயின் இருதயமாய், தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்குக்கு மத்தியாய் விளங்குவது வவுனியா மாநகரம். ஈழத்தின் இருபெரும் சமூகம் வாழும் பிரதேசங்களுக்குச் சந்தியாகவும், கலாச்சாரத் தொடர்புபடும் சந்தியாகவும் இது இடம் பெற்றிருக்கிறது. இத்தகைய முக்கிய கேந்திரஸ்தானமாக விளங்கும் வவுனியாவில் தமிழ் மக்களுக்கென சமய, கலாச்சார வளர்ச்சிக்கு ஓர் நிறுவனம் இன்றியமையாதது.

அமரர் சர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தமது மறைவுக்குமுதல் நாள் வவுனியாவில் இச்சங்கம் நடாத்திய பொதுக்கூட்டம் ஒன்றில் தமிழகப் பேராசிரியர், திரு. அ. ச. சம்பந்தன் அவர்களுடன் [illegible] பெரியபுராண [illegible] நிகழ்த்திய போது வவுனியாவின் கலாச்சார வளர்ச்சியின் முக்கியத்துவத்தையும், திருக்கேதீஸ்வரம், கோணேஸ்வரம் முன்னீஸ்வரம் ஆகிய மூன்று பெரும் ஸ்தலங்களுக்கு மத்தியாகவும் யாழ்ப்பாணக் குடாநாட்டு திருத்தலங்களுக்கு தொடர்பு ஏற்படுத்தும் மத்திய இடமாகவும் வவுனியா விளங்குவதால் இதில் ஓர் கலாச்சார நிலையம் நிறுவ இந்துக்கள் அனைவரும் ஈடுபட வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார். அன்னார் தமது வாழ்வின் இறுதி நாளில் வெளியிட்ட கருத்து வீண்போகாத வகையில் கலாச்சார நிலையம் உருப்பெற்று வருகிறது.

வவுனியா நகர மத்தியில் பஸ் நிலையத்துக்கும் புகையிரத நிலையத்துக்கும் மத்தியாகவும், அண்மையாகவும் தகுதிவாய்ந்த இடத்தில் மேல்மாடியில் 14 அறைகளையும் கீழே ஓர் மண்டபமும் அமையக்கூடியதாய் $1\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் பெறுமதி வாய்ந்த கட்டடம் அமைக்கும் முயற்சியில் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் முயன்று வருகிறது. இதற்கு இதுவரை [illegible] கள் [illegible] நன்கொடைகள் மூலம் ரூபா 15 ஆயிரத்துக்கு மேல் செலவு செய்யப்பட்டு கட்டட வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கட்டடத்தைபூர்த்திசெய்வதற்கு இன்னும் ஏறத்தாழ 1 4/1 இலட்ச ரூபா செலவாகும். ஆனால் இதைச் சேர்ப்பதில் தற்பொழுது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி இதற்கு இடையூறு செய்யினும் தற்போதைய காலச் சூழ்நிலையையும் தமிழ்ச் சமூகத்தின் கலாச்சாரக் கட்டுக் கோப்பைப் பேணுவதின்

**த. நல்லதம்பி**
சுத்தானந்த
இந்து இளைஞர் சங்கம்

அவசியத்தையும் உணர்ந்து கலாச்சாரக் கட்டிடத்தை வவுனியாவில் காலந் தாழ்த்தாது கட்ட வேண்டிய முக்கியத்துவத்தையும் சிறிது சிந்தித்து உணர்ந்தால் இலங்கையின் எப்பாகத்திலிருக்கும் இந்துப் பெருமக்கள் இக் கட்டடத்தை பூர்த்தி செய்வதற்கு உதவி செய்ய முன்வருவார்கள் என்பதற்கு ஐயமில்லை. அன்றியும் திருக்கேதீஸ்வரம் செல்லும் யாத்திரீகர்கள், பாடசாலை மாணவ மாணவிகள் வவுனியா ஊடாக செல்லுங்கால் சிரமசாந்தி செய்வதன் பொருட்டு தங்கி நிற்க இடமின்றி தெருவோரங்களிலும் கடையோரங்களிலும் நின்று பல வசதியீனங்களை சமாளித்து செல்லும் நிலையை உணர்ந்த இந்துப் பெருமக்கள் அதற்கென ஓர் கட்டடம் அமைக்கும் இச் சங்கத்தின் முயற்சிக்கு ஆதரவளிக்க பின்நிற்க மாட்டார்கள்.

சைவத்தமிழினம் தன் நிலையை உணர்ந்தமைக்கு அடையாளமாகவும், தன் மதத்தின் வளர்ச்சியில், கலாச்சாரச்சிறப்பில் பக்தி சிரத்தையும், எதிர்காலச் சந்ததியின் வாழ்வுக்கு வளம் செய்யும் பொறுப்புணர்வையும் புலப்படுத்து முகமாகவும் இக்கலாச்சாரக் கட்டடத்தை வவுனியா நகரமத்தியில் எழில் பெற கட்டி முடித்துப் பெருமையடைவதில் எல்லா இந்துப்பெருமக்களும் பெரும் பங்கு கொள்வார்கள் என எதிர்பார்க்கலாம். அதுமட்டுமன்றி வவுனியா மாவட்டத்தில் இதுவரை காலமும் எழுச்சி நிலை பெறாதிருந்துவரும் சைவமத, கலாச்சார வளர்ச்சியை மேலோங்கச் செய்வதற்கும் அத்துறையில் எல்லோரும் இணைந்து செயற்படுவதற்கும் இத்தகைய ஓர் கட்டட வசதி மிகவும் இன்றியமையாதது என்பதை எவரும் ஏற்றுக்கொள்வர்;

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

சிலோன் என்டடெயின்மென்ட்ஸாரின் திரையில் காட்சியளிக்கிறது

அனேக மக்களின் வேண்டுகோளுக்கமைய

# சென்ட்ரல் திரையில்

இப்பொழுது காட்சியளிக்கிறது!


நடிகர் திலகம் சிவாஜி கணேசன், கே. ஆர். விஜயா,
நாகேஷ், நம்பியார் நடித்த

# 'ராமன் எத்தனை ராமனடி'

கிங்ஸ்லி — பிளாஸா — லிடோ
(கொழும்பு) (வெள்ளவத்தை) (யாழ்நகர்)

சிவாஜி -
சரோஜாதேவி,
முத்துராமன்-
லட்சுமி,

சோ - மனோரமா -
தேங்காய் சீனிவாசன்
ஜெய்குமாரி -
வி. கோபாலகிருஷ்ணன்



நடித்த—

# "அருணோதயம்"

இசை:
கே. வி. மகாதேவன்.

டைரக்ஷன்:
வி. ஸ்ரீனிவாசன்.

## 2-வது மாதம்

கெப்பிட்டல் வெலிங்டன் விஜயா
(கொழும்பு) (யாழ்நகர்) (மட்டுநகர்)

சிவாஜி—ஜெயலலிதா



பாலாஜி-நிர்மலா-சோ

மற்றும் பலர் நடித்த—

ஜெயார் மூவிஸ்

# எங்க மாமா

(ஈஸ்ட்மன் கலர்)

## தியாகராஜ பாகவதர் வாரம்!

தனது இனிய கானங்களால் தமிழ் உலகையே மதி மயக்கிய பாகவதரின் படங்களையும் அவரின் இனிய குரலையும் திரையில் பார்க்க முடியுமா என்று ஏங்கியவர்களுக்கு இதோ

# செல்லமகால் திரையில்

இப்பொழுது காட்சியளிக்கிறார்

தியாகராஜ பாகவதர் ரி. ஆர். ராஜகுமாரி
என். எஸ். கிருஷ்ணன் ரி. ஏ. மதுரம் வசந்தகோகிலம்

நடித்த

# ஹரிதாஸ்

முக்கிய அறிவித்தல்:-

தியாகராஜ பாகவதரின் குரல் அவரின் பாட்டுகளாக செல்லமகால் தியேட்டரில் காட்சி தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்பு கேட்கத் தவற வேண்டாம். நேர காலத்தில் உங்கள் ஆசனங்களில் இருக்கவும்.

## அடுத்து

தமிழ் மக்களின்
அழியாத காவியம்

"தியாகராஜ பாகவதர்
சந்தானலக்ஷ்மி
என். எஸ். கிருஷ்ணன்
ரி. ஏ. மதுரம்
ரி. எஸ். பாலையா

நடித்த

# அம்பிகாபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலேசன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ, இலக்கத்தில் 1972ம் வருடம் ஜூலை மாதம் 23ம் திகதி அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.